# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

equitas
Equitas Small Finance Bank

இந்த ஆவணம் எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்கில் (வங்கி / ESFB) ஏற்கனவே உள்ள அல்லது எதிர்காலத்தில் எப்போது வேண்டுமானாலும் தொடங்கப்படும் அனைத்து கணக்குகளுக்கும் பொருந்தும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வழங்குகிறது. நான், எனது மற்றும் வாடிக்கையாளர் என்ற சொற்கள் கணக்கைத் தொடங்கும் நபரைக் குறிக்கும் மற்றும் ஒருமை மற்றும் பன்மை இரண்டையும் உள்ளடக்கும். ஆண்பால் குறிப்பில் பெண்பால் மற்றும் பொதுவான பாலினம் உள்ளடங்கும். வங்கியானது எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்., என்ற வங்கி நிறுவனத்தை குறிப்பிடுகிறது. இது நிறுவனங்கள் சட்டம் 2013-இன் கீழ் இந்தியாவில் இணைக்கப்பட்டது மற்றும் அதன் பதிவு அலுவலகம் 4-வது மாடி, ஃபேஸ் II, ஸ்பென்சர் பிளாசா, எண்.769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600002 என்ற முகவரியில் அதன் பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ளது.

1. பொதுவானது - அனைத்து சேவைகளுக்கும் பொருந்தும்

1.1 வங்கியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அமலில் உள்ள விதிகள் மற்றும் தகவல் தெரிவிக்கப்பட்டு வங்கியின் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் எனது கணக்கு தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்களுக்கு நான் இணங்க ஒப்புக்கொள்கிறேன்.

1.2 கணக்கைத் தொடங்குவதும் பராமரிப்பதும் இந்திய ரிசர்வ் வங்கியால் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்படும் அல்லது திருத்தப்படும் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

1.3 எந்தவொரு டெபாசிட் கணக்கையும் தொடங்குவதற்கு முன், வங்கியின் உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் என்ற வழிகாட்டுதல்களின் கீழ், வங்கி உரிய விடாமுயற்சியை மேற்கொள்ளும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். KYC, AML அல்லது பிற சட்டப்பூர்வ / ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக, அடையாளம், முகவரி, புகைப்படம் மற்றும் அத்தகைய எந்தவொரு தகவல்கள் போன்ற தேவையான ஆவணங்கள் அல்லது சான்றுகளை நான் சமர்ப்பிக்க தேவைப்படும்.

மேலும், கணக்கு தொடங்கப்பட்ட பிறகு, தற்போதுள்ள ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களுக்கு இணங்க, வங்கிக்கு தேவைப்படும் கால இடைவெளியில் மேற்கண்ட ஆவணங்களை மீண்டும் சமர்ப்பிக்க ஒப்புக்கொள்கிறேன்.

1.4 சாதாரண சூழ்நிலைகளில், குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்னறிவிப்பதன் மூலம் எனது கணக்கை எந்த நேரத்திலும் மூடுவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

1.5 வங்கி தனது சொந்த விருப்பத்தின் பேரில், முழுமையாகவோ அல்லது பகுதியளவாகவோ எனது கணக்கில் கொடுக்கப்பட்டுள்ள சேவைகள் / வசதிகள் எதையும் எந்த நேரத்திலும் எனக்கு குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்னறிவிப்பதன் மூலம் திருத்தலாம் மற்றும் / அல்லது பிற சேவைகள் / வசதிகளுக்கு மாற்றிக்கொள்வதற்கான விருப்பத்தை எனக்கு வழங்கலாம் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

1.6 எனது கணக்கின் நிலை அல்லது முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்கப்படும், அவ்வாறு செய்யத் தவறினால் தகவல் தொடர்பு/ வழங்கக்கூடியவைகள் பெறப்படாவிட்டாமை அல்லது எனது பழைய முகவரிக்கு அனுப்பப்படுவதற்கு நான் பொறுப்பாவேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

1.7 எனது காசோலை புத்தகம் / டெபிட் கார்டை கவனமாகப் பாதுகாக்க ஒப்புக்கொள்கிறேன். அது தொலைந்து / திருட்டு போகும் பட்சத்தில், வங்கிக்கு எழுத்துப்பூர்வமாக உடனடியாக தெரிவிப்பேன்.

1.7.1 கணக்குத் தொடங்கும் போது/அதன்பிறகு வங்கிப் பதிவேடுகளில் அப்டேட் செய்யப்பட்ட நீங்கள் வழங்கிய விவரங்களில் (முகவரி, மொபைல் எண், மின்னஞ்சல் ID, ஆண்டு வருமானம் / விற்றுமுதல் போன்றவை) மாற்றங்கள் ஏதேனும் இருந்தால், 30 நாட்களுக்குள் வங்கிப் பதிவேடுகளைப் புதுப்பிக்க வங்கியிடம் விவரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்."

1.8 வங்கியால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் குறைந்தபட்ச / சராசரி இருப்புத்தொகையை எனது கணக்கில் பராமரிப்பேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

1.9 எனது கணக்கு அல்லது அளிக்கப்பட்ட ஏதேனும் பரிவர்த்தனை அல்லது சேவைகள் தொடர்பாக, வங்கி விதிக்கக்கூடிய அனைத்து கட்டணங்கள், வட்டி மற்றும் செலவுகள் ஆகியவற்றை பொருந்தக்கூடிய இடங்களில் நான் செலுத்துவதற்கு பொறுப்பாவேன். மற்றும் எனது கணக்கில் டெபிட் செய்வதன் மூலம் வங்கியால் அது திரும்பப் பெறப்படலாம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். போதுமான நிதி கிடைக்காத பட்சத்தில், முழுத் தொகையும் திரும்பப் பெறும் வரை, குறிப்பிட்ட காலத்திற்குக் கட்டணங்கள் கணக்கில் டெபிட் செய்யப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன் மற்றும் ஒப்புக்கொள்கிறேன்.

1.9.1 குழு மட்டக் கட்டணங்கள்: சேமிப்பு அல்லது நடப்புக் கணக்கின் தயாரிப்புகளுக்குப் பொருந்தக்கூடிய கிராமப்புற / அரை நகர்ப்புற கிளை அல்லது பெண் உரிமையாளருக்கான AQB தேவைப்பாடு கணக்கானது குழுவின் ஒரு பகுதியாக இருக்கும் வரையிலும் பொருந்தாது. மேலும் குழு மட்டத்தில் கட்டண அட்டவணையில் அறிவிக்கப்பட்ட மற்றும் குறிப்பிடப்பட்ட இருப்பு பொருந்தும் என்பதை நான் / நாங்கள் இதன் மூலம் உறுதிசெய்து புரிந்துகொள்கிறேன்/புரிந்துகொள்கிறோம்.

சேமிப்புக் கணக்கிற்கான ஃபிக்ஸட் டெபாசிட் / டெபிட் கார்டு ஸ்வைப் மற்றும் நடப்புக் கணக்கிற்கான பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் AQB தள்ளுபடியானது, கணக்கானது குழுவின் ஒரு பகுதியாக இருக்கும் வரையிலும் பொருந்தாது எனவே குழு மட்டத்தில் கட்டண அட்டவணையில் அறிவிக்கப்பட்ட மற்றும் குறிப்பிடப்பட்ட இருப்பு பொருந்தும் என்பதை நான் / நாங்கள் இதன் மூலம் உறுதிசெய்து புரிந்துகொள்கிறேன் /புரிந்துகொள்கிறோம்.

1.9.2 நாங்கள் திட்டத்தை மாற்றத் தேர்வுசெய்தால், அந்தக் கணக்கு குழுவின் ஒரு பகுதியாக இருக்கத் தகுதியுடையதாக இருந்தால் மட்டுமே குழுவாக்கம் வழங்கப்படும், இல்லையெனில் அந்தக் கணக்கு குழுவிற்கு வெளியே ஒரு தனிப்பட்ட கணக்காக கருதப்படும் மற்றும் www.equitasbank.com-இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் பொருந்தக்கூடிய அனைத்து கட்டணங்கள் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும் என்பதை நான் / நாங்கள் இதன் மூலம் உறுதிசெய்து புரிந்துகொள்கிறோம்.

1.10 கிளையிலிருந்து தனிப்பட்ட முறையில் சேகரிப்பதற்கான எனது குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் இல்லாத பட்சத்தில், காசோலை புத்தகங்கள், ஃபோன் பேங்கிங் TIN-கள், நெட் பேங்கிங் IPIN-கள், டெபிட் / ATM கார்டுகள் மற்றும் PIN-கள் ஆகியவை கூரியர் / மெஸெஞ்சர் / அஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதப் பரிமாற்றத்திற்காக என்னால் தெரிவிக்கப்பட்ட முகவரிக்கு வங்கியின் விருப்பப்படி வேறு ஏதேனும் முறை மூலமாகவோ அனுப்பப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன் மற்றும் ஒப்புக்கொள்கிறேன்.

1.11 மைனரின் சார்பாக அவரது இயற்கையான காப்பாளர் அல்லது தகுதி வாய்ந்த அதிகார வரம்பால் நியமிக்கப்பட்ட காப்பாளரால் கணக்கு தொடங்கப்படலாம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். மேற்கூறிய மைனர் நிறைவயது அடையும் வரை, மேற்கூறிய கணக்கில் உள்ள எந்தவொரு விளக்கத்தின் அனைத்து பரிவர்த்தனைகளிலும் காப்பாளர் மைனரைப் பிரதிநிதித்துவப்படுத்துவார். மைனர் நிறைவயது அடைந்தவுடன், கணக்கை இயக்கும் காப்பாளரின் உரிமை நிறுத்தப்படும். காப்பாளர், மைனரின் கணக்கில் மேற்கூறிய மைனரின் எந்தவொரு பணமெடுத்தல் / பரிவர்த்தனைகளுக்கு எதிராக வங்கிக்கு இழப்பீடு வழங்க ஒப்புக்கொள்கிறார்.

1.12 பரிவர்த்தனைகளை செயல்படுத்துவதற்காக எனது கணக்கில் போதுமான நிதி / க்ளியர் பேலன்ஸ் / முன் ஏற்பாடு செய்யப்பட்ட கடன் வசதிகள் இருக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் மற்றும் ஏற்றுக்கொள்கிறேன். நிதிப் பற்றாக்குறையின் காரணமாக வங்கி எனது அறிவுறுத்தல்களுக்கு இணங்காததால் ஏற்படும் எந்த பின்விளைவுகளுக்கும் வங்கி பொறுப்பேற்காது என்பதை ஒப்புக்கொள்கிறேன், மேலும் நிதிப் பற்றாக்குறையைப் பொருட்படுத்தாமல், என்னிடமிருந்து முன் ஒப்புதல் அல்லது அறிவிப்பு இல்லாமல் அறிவுறுத்தல்களைச் செயல்படுத்த வங்கி தனது சொந்த விருப்பத்தின் பேரில் முடிவு செய்யலாம் மற்றும் அதன் மூலம் எழும் முன்பணம், ஓவர் டிராஃப்ட் அல்லது கிரெடிட் மற்றும் அனைத்து தொடர்புடைய கட்டணங்களையும் வட்டியுடன் திருப்பிச் செலுத்துவது எனது பொறுப்பாகும். காசோலைகளை அடிக்கடி ஏற்காமை செய்வது அல்லது போதிய நிதி இல்லாததால் அதிக மதிப்புள்ள காசோலை ரிட்டர்ன்கள் காசோலை புத்தகங்கள் நிறுத்தப்படுவதற்கு / வங்கிக் கணக்கை மூடுவதற்கு வழிவகுக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

1.13 ஒரு கணக்கில் உள்ள பணத்திற்கு மேல் அதிகமாக எடுக்கப்பட்டால், எனது எந்தக் கணக்கிலும் உள்ள எந்தக் கிரெடிட்டிற்கும் எதிராக இந்தத் தொகையை ஒதுக்க வங்கிக்கு உரிமை உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

1.14 எனது கணக்கில் செயல்படும் முறையில் ஏதேனும் மாற்றத்தை எனது கணக்கில் கூட்டு வைத்திருப்பவர்கள் அனைவரின் ஒப்புதலுடன் வங்கி செயல்படுத்தலாம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். எனது கணக்கில் கூட்டு வைத்திருப்பவர்கள் அனைவரின் ஒப்புதலின்றி பெறப்படும் எந்தவொரு மாற்றத்திற்கான கோரிக்கையையும் வங்கி ஏற்காது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். கணக்கைத் தொடங்கும் போது ஒப்புக் கொள்ளப்பட்ட செயல்பாட்டு முறைக்கு இணங்க, அதுவரை வங்கியானது அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்பதை நான் மேலும் ஏற்றுக்கொள்கிறேன் மற்றும் ஒப்புக்கொள்கிறேன்.

1.15 நான் வைத்திருக்கும்/பயன்படுத்தும் வங்கியின் ஏதேனும் திட்டங்கள்/சேவைகளின் அம்சங்கள் தொடர்பாக எனக்கு ஏதேனும் புகார் இருந்தால், தீர்வுக்காக வங்கியில் உள்ள குறைதீர்ப்புப் பிரிவை customerservice@equitasbank.com என்ற முகவரியில் நான் அணுகலாம் மற்றும் புகார் அளித்த 30 நாட்களுக்குள் எனக்கு திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை என்றால், வங்கி குறைதீர்ப்பாணையத் திட்டம் 2006-இன் கீழ், நான் எனது கணக்கை வைத்திருக்கும் பகுதியின் பொறுப்பாளரான இந்திய ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்பட்ட குறைதீர்ப்பாளரை அணுகலாம் என்பதை அறிவேன். அதற்கான விவரங்கள் www.bankingombudsman.rbi.org.in-இல் கிடைக்கும்.

1.16 சேமிப்புக் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கிற்கு (கிரெடிட் வட்டி, டெபிட் வட்டி போன்ற சிஸ்டம் மூலம் உருவாக்கப்பட்ட பரிவர்த்தனைகளை உள்ளடக்காது) தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு கணக்கில் என்னால் / எங்களால் தொடங்கப்பட்ட பரிவர்த்தனைகள் ஏதும் இல்லை என்றால், அந்தக் கணக்கு வங்கியின் 'செயலற்ற' கணக்காக கருதப்படும் என்பதை நான் / நாங்கள் ஒப்புக்கொள்கிறேன்/ஒப்புக்கொள்கிறோம். இது சம்பந்தமாக எனது/எங்களது (அனைத்து கூட்டு வைத்திருப்பவர்கள்) எழுத்துப்பூர்வ அறிவுறுத்தலின் பேரில் மற்றும் என்னால்/எங்களால் பிரதானக் கிளையில் பரிவர்த்தனையைத் தொடங்குவதன் மூலம் மட்டுமே கணக்கு நிலை 'செயலில் உள்ளது' என மாறும் என்பதை நான் / நாங்கள் ஒப்புக்கொள்கிறேன்/ ஒப்புக்கொள்கிறோம். கணக்கு நிலை 'செயலற்றது' ஆக இருக்கும் வரை, ATM, இன்டர்நெட் பேங்கிங், ஃபோன் பேங்கிங், மொபைல் பேங்கிங் போன்ற மாற்று வங்கிச் சேனல்கள் மூலம் பரிவர்த்தனைகளை வங்கி அனுமதிக்காது என்பதை நான் / நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

1.17 சேமிப்புக் கணக்கிற்கான வட்டியானது வங்கியால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விகிதத்தில் கணக்கிடப்படுகிறது.

1.18 3 மாதங்கள் அல்லது அதற்கு மேல் தொடர்ந்து கணக்கு இருப்பு பூஜ்ஜியமாக இருக்கும் பட்சத்தில், வாடிக்கையாளருக்குத் தெரிவிக்க எந்தவொரு கடமைபொறுப்பும் இல்லாமல் கணக்கை மூடுவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது என்பதை நினைவில் கொள்ளவும்.

1.19 "அத்தகைய முகவரி இல்லை, அப்படிப்பட்ட நபர் இல்லை, ஓரளவு மறைக்கப்பட்ட அல்லது முழுமையடையாத முகவரி" போன்ற காரணங்களுக்காக கணக்கு தொடங்கிய பின் வரவேற்பு கிட் வழங்கப்படாவிட்டால், வாடிக்கையாளரை தொடர்புகொள்ள தேவையான முயற்சிகளை மேற்கொண்ட பிறகு கணக்கை முடக்க வங்கி கட்டுப்படுத்தப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

TRUE COPY

# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1.20 சேமிப்பு வங்கி கணக்கு ESFB ATM-கள், இன்டர்நெட் பேங்கிங், ஃபோன் பேங்கிங், மொபைல் பேங்கிங் ஆகியவற்றுக்கான இலவச அணுகலை வேறுவிதமாகக் கூறாத வரையில் வழங்குகிறது.

1.21 தகவல்களை வெளிப்படுத்தல்: எனக்கு கடன்கள் / முன்பணம் / பிற நிதி அடிப்படையிலான மற்றும் நிதியல்லாத கடன் வசதிகளை வழங்குவது தொடர்பான முன் நிபந்தனையாக, என்னால் பெறப்பட்ட / பெறப்பட உள்ள கடன் வசதி, என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட / ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கடமைபொறுப்புகள், தவறுதல்நிலை, ஏதேனும் இருந்தால், அதை நிறைவேற்றுவது தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகள் ஆகியவற்றை வங்கி வெளிப்படுத்துவதற்கு எனது ஒப்புதல் தேவை என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

அதற்கேற்ப, என்னைப் பற்றிய அனைத்து அல்லது அத்தகைய தகவல்கள் மற்றும் தரவுகளை வங்கி

i. வெளிப்படுத்துவதை இதன்மூலம் ஏற்றுக்கொள்கிறேன் மற்றும் ஒப்புதல் அளிக்கிறேன்

ii. என்னால் பெறப்பட்ட/பெறப்பட உள்ள எந்தவொரு கடன் வசதி தொடர்பான தகவல்கள் அல்லது தரவுகள், மற்றும்

iii. கடன் தகவல் பணியகங்கள் மற்றும் ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட பிற ஏஜென்சிகளுக்குத் தெரிவிக்க மற்றும் வழங்குவதற்கு, வங்கி பொருத்தமானது மற்றும் அவசியமானது என்று கருதும் எனது அத்தகைய கடமைபொறுப்பை நிறைவேற்றுவதில் ஏதேனும் தவறுதல் இருந்தால், நான் வங்கிக்கு அளித்த தகவல்கள் மற்றும் தரவுகள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று உறுதியளிக்கிறேன்.

நான் பின்வருவனவற்றை ஏற்றுக்கொள்கிறேன்:

i. கடன் தகவல் பணியகங்கள் மற்றும் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்தவொரு ஏஜென்சியும், வங்கியால் வெளியிடப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகளை அவர்களுக்கு ஏற்றதாகக் கருதப்படும் விதத்தில் பயன்படுத்தலாம், செயலாக்கலாம்; மற்றும்

ii. கடன் தகவல் பணியகங்கள் மற்றும் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஏஜென்சிகள், அவர்களால் தாயார் செய்யப்பட்ட செயலாக்கப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகள் அல்லது திட்டங்களை வங்கிகள் / நிதி நிறுவனங்கள் மற்றும் பிற கடன் மானியம் அல்லது பதிவு செய்த பயனர்களுக்கு, இதன் சார்பில் ரிசர்வ் வங்கி மூலம் குறிப்பிடப்பட்டபடி, பரிசீலிப்பதற்காக வழங்கலாம்.

1.22 தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலை: எந்தவொரு பரிவர்த்தனையும் பலனளிக்கவில்லை அல்லது நிறைவுசெய்யப்படவில்லை என்றால் அல்லது ஒரு தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலை நிகழ்வு (கீழே வரையறுக்கப்பட்டுள்ளது) மூலம் செயல்திறன் தடுக்கப்படுகிறது, குறுக்கிடப்படுகிறது அல்லது தாமதப்படுத்தப்படுகிறது என்றால் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அல்லது அதன் சேவைகள் / வசதிகளுக்கு குறிப்பாகப் பொருந்தக்கூடிய எந்தவொரு கடமைபொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் வங்கியின் ஏதேனும் தோல்விக்கு வங்கி பொறுப்பாகாது, மேலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலை நிகழ்வு தொடரும் வரை அதன் கடமைபொறுப்புகள் இடைநிறுத்தப்படும்.

"தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலை" என்பது வரம்புகள் இல்லாமல், எந்தவொரு தகவல் தொடர்பு அமைப்புகளும் கிடைக்காதது, செயல்முறை, அல்லது பணம் செலுத்துதல் அல்லது விநியோக பொறிமுறையில் மீறல் அல்லது வைரஸ், நாசவேலை, தீ, வெள்ளம், வெடிப்பு, கடவுளின் செயல்கள், உள்நாட்டு கலவரம், வேலைநிறுத்தங்கள் அல்லது தொழில்துறை நடவடிக்கைகள், கலவரங்கள், கிளர்ச்சி, போர், அரசாங்கத்தின் செயல்கள், கணினி ஹேக்கிங், கணினி தரவுகள் மற்றும் சேமிப்பக சாதனங்களின் அங்கீகரிக்கப்படாத அணுகல், கணினி செயலிழப்பு, கணினி முனையத்தில் அல்லது கணினிகள் செயலிழத்தல் ஏதேனும் தீங்கிழைக்கும், அழிவுகரமான அல்லது சிதைக்கும் குறியீடு அல்லது நிரல், இயந்திர அல்லது தொழில்நுட்ப பிழைகள் / செயலிழப்புகள் அல்லது மின்வெட்டு, தொலைத்தொடர்புகளில் தவறுகள் அல்லது செயலிழப்புகள் போன்றவற்றால் பாதிக்கப்படுதல் உள்ளிட்ட வங்கியின் நியாயமான கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஏதேனும் காரணத்தினால் ஏற்படும் எந்தவொரு நிகழ்வையும் குறிக்கிறது.

1.23 வங்கியானது எந்த நேரத்திலும் அதன் எந்த குறிப்பிட்ட உரிமைகளுக்கும் பாரபட்சம் இல்லாமல், என்னுடன் வேறு எந்த ஒப்பந்தத்தின் கீழும், அதன் சொந்த விருப்பப்படி மற்றும் எனக்கு தெரிவிக்காமல், மற்றும் வங்கியின் ஏதேனும் நிலுவைத் தொகையின் பேரில் மற்றும் கடன் வசதி தொடர்பாக அல்லது அதன் கீழ் நிலுவையில் உள்ள, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் செலுத்த வேண்டிய கட்டணங்கள் / பாக்கிகள் உட்பட வங்கியில் இருக்கும் / டெபாசிட் செய்யப்பட்டிருக்கும் எனக்குச் சொந்தமான எந்தப் பணத்தையும் அல்லது வங்கி எனக்கு செலுத்த வேண்டிய பாக்கிகளை பயன்படுத்திக்கொள்ள நான் இதன்மூலம் வங்கியுடன் பற்றுடைமை மற்றும் செட் ஆஃப் செய்வதை உறுதிசெய்து அளிக்கிறேன்.

1.24 வங்கி ஆனது டெபாசிட்கள், கடன்கள் போன்ற, அதன் நிதித் திட்டங்களை விற்பனை செய்யும்/விளம்பரப்படுத்தும் நோக்கத்திற்காக வணிக நிருபர்கள், விற்பனை முகவர்கள் மற்றும் வணிக ஒருங்கிணைப்பாளர்களை ஈடுபடுத்துகிறது என்பதையும் மற்றும் வங்கி ஆனது எங்கள் தொடர்பு விவரங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் அவர்களிடமிருந்து அழைப்புகளைப் பெறுவதற்கும் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை நான்/நாங்கள் இதன் மூலம் உறுதி செய்கிறேன்/செய்கிறோம். அத்தகைய நபர்கள்/நிறுவனங்களின் நடத்தை தொடர்பாக ஏதேனும் மனக்குறைகள் ஏற்பட்டால், வங்கியின் நோடல் அதிகாரி அல்லது வாடிக்கையாளர் கவனிப்புத் துறையை அணுக எனக்கு/எங்களுக்கு உரிமை உள்ளது என்பதையும் நான்/நாங்கள் அறிவேன்/அறிவோம்.

2. சேமிப்பு கணக்குகள்

2.1 சம்பள கணக்குகள்

2.1.1 சம்பள வரவுகளை திருப்பியனுப்புதல் (ரிவர்ஸல்): எனது பணிக்கமர்த்துபவர் /நிறுவனத்தின் கோரிக்கையின் பேரில், பணிக்கமர்த்துபவர் /நிறுவனத்தால் அவர்களின் அறிவுறுத்தல்களின்படி, எனது கணக்கில் ஏதேனும் அதிகப்படியான கிரெடிட் தொகையை எனக்கு அறிவிப்புடன் ஹோல்டு ஃபண்டுகள் /டெபிட் செய்தல்/கிரெடிட்டை திருப்பியனுப்புதல் என குறிப்பதன் மூலம் மீட்டெடுக்க வங்கிக்கு நான் இதன்மூலம் மாற்ற முடியாமல் மற்றும் நிபந்தனையின்றி அங்கீகரிக்கிறேன். வங்கியால் மேற்கொள்ளப்படும் அத்தகைய ஹோல்டு ஃபண்டுகள் / டெபிட் / கிரெடிட்டை திருப்பியனுப்புதல் ஆகியவற்றிற்கு வங்கி பொறுப்பேற்காது.

2.1.2 பணிக்கமர்த்துபவர் /நிறுவனத்துடனான எனது பணியின் அடிப்படையில் எனது கணக்கு வங்கியில் தொடங்கப்பட்டு, "சம்பளக் கணக்கு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன். பணிக்கமர்த்துபவர் /நிறுவனம் மற்றும் வங்கிக்கு இடையேயான ஏற்பாட்டின்படி, பணிக்கமர்த்துபவர் / நிறுவனத்துடனான எனது பணியின் காலத்தின் போது அல்லது பணிக்கமர்த்துபவருக்கும்/ நிறுவனத்திற்கும் வங்கிக்கும் இடையிலான ஏற்பாடு நிலைத்திருக்கும் காலம் வரை மட்டுமே வங்கியின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் சம்பளக் கணக்கில் நான் சில வசதிகளைப் பெறுவதற்கு எனக்கு உரிமை இருக்கலாம் என்பதைப் புரிந்துகொள்கிறேன். பணிக்கமர்த்துபவருடனான/நிறுவனத்துடனான பணி முடிவுறுதலின் போது வங்கிக்கு அது குறித்து தெரிவிப்பேன். "பணிக்கமர்த்துபவர் / நிறுவனம்" என்ற வார்த்தைகள் நான் பணிபுரியும் நிறுவனத்தைக் குறிக்கிறது மற்றும் அவருடைய/அதன் கோரிக்கையின் பேரில் வங்கியில் சம்பளக் கணக்கு தொடங்கப்படுகிறது.

2.1.3 சம்பளத்தை வரவு வைப்பதற்கான சரியான கணக்கு எண்ணை வழங்குவதற்கான பொறுப்பு எனது பணிக்கமர்த்துபவர் / நிறுவனத்திற்கு மட்டுமே இருக்கும், மேலும் எனது பணிக்கமர்த்துபவர் /நிறுவனத்தால் வழங்கப்பட்ட தவறான கணக்கு எண்ணிலிருந்து எழும் எந்தவொரு தவறான வரவுக்கும் வங்கியை நான் பொறுப்பாக்க மாட்டேன் என்பதை நான் புரிந்துகொண்டு ஒப்புக்கொள்கிறேன்.

2.1.4 தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு எனது சம்பளக் கணக்கில் சம்பள வரவுகள் இல்லாத பட்சத்தில், கணக்கு வைத்திருப்பவருக்கு/எனக்கு எந்த அறிவிப்புமுன்றி, சம்பளக் கணக்கின் நிலையை சேமிப்பு ரெகுலர் கணக்காக மாற்ற வங்கிக்கு உரிமை உண்டு என்பதை நான் இதன்மூலம் ஒப்புக்கொள்கிறேன். ESFB சேமிப்புக் கணக்கிற்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நிலை மாற்றப்பட்ட நாளிலிருந்து இந்தக் கணக்கிற்குப் பொருந்தும். சேமிப்புக் கணக்கிற்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அம்சங்கள் வங்கியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

2.1.5 சம்பளக் கணக்கில் தொடர்ந்து பணிக்கமர்த்துபவர் /நிறுவனத்தின் மூலம் மற்றும்/அல்லது அவர்களுடைய அறிவுறுத்தல்களின் பேரில் எந்தத் தொகையும் வரவு வைக்கப்படாமல் இருப்பதைக் கவனித்தால், அல்லது எக்காரணம் கொண்டும் பணிக்கமர்த்துபவர் /நிறுவனத்தின் பணியில் இருப்பதை நான் நிறுத்திக்கொள்ளும் நிகழ்வில், எனக்கு 30 நாள் அறிவிப்பை வழங்கிய பிறகு வங்கி தனது தனிப்பட்ட மற்றும் முழுமையான விருப்பத்தின் பேரில் சம்பளக் கணக்கை மூடலாம் என்பதை நான் இதன்மூலம் ஒப்புக்கொள்கிறேன்.

2.2 அடிப்படை சேமிப்பு வங்கி டெபாசிட் கணக்கு (அடிப்படை மற்றும் சிறு கணக்கு):

2.2.1 ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி, அடிப்படை சேமிப்பு வங்கி டெபாசிட் கணக்கு வைத்திருப்பவர்கள் ESFB-இல் வேறு எந்த சேமிப்புக் கணக்கையும் திறக்கத் தகுதியற்றவர்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். எனவே, நான் ESFB-இல் வேறு ஏதேனும் சேமிப்புக் கணக்கு(கள்) வைத்திருந்தால், அடிப்படை சேமிப்பு வங்கி டெபாசிட் கணக்கைத் தொடங்கிய 30 நாட்களுக்குள் அத்தகைய பிற சேமிப்புக் கணக்கை(கணக்குகளை) மூட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

2.2.2 அடிப்படை சேமிப்பு வங்கி டெபாசிட்/கணக்கைத் தொடங்கிய 30 நாட்களுக்குள் அத்தகைய கணக்கை(கணக்குகளை) நான் மூடாவிட்டால், ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின் கீழ் பொருந்தும்படி மற்ற சேமிப்புக் கணக்கை(கணக்குகளை) (ஏதேனும் இருந்தால்) மூடுவதற்கு வங்கிக்கு உரிமை உள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

2.3 அடிப்படை சேமிப்பு வங்கி டெபாசிட் சிறு கணக்கு

2.3.1 எனது கணக்கு பகுதியளவு / nil KYC ஆவணங்களுடன் தொடங்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்கிறேன்.

2.3.2 ESFB-இல் BSBDA சிறு கணக்கு வைத்திருப்பவர் என்ற முறையில், நான் KYC இணக்கம் உள்ள வரை, வேறு எந்தக் கணக்கையும் (CA/SB/FD/RD) தொடங்க எனக்கு தகுதியில்லை என்பதைப் புரிந்துகொள்கிறேன்.

2.3.3 வங்கியில் உள்ள எனது கணக்கில் இருப்புத்தொகை ஒரு நிதியாண்டில் ரூ. ஐம்பதாயிரத்திற்கு (ரூ. 50,000/-) மிகாமல் இருக்க வேண்டும், அல்லது மொத்த வரவுகள் ரூ. ஒரு இலட்சத்திற்கு (ரூ.1,00,000/-) மிகாமல் இருக்க வேண்டும் அல்லது ஒரு மாதத்தில் எனது கணக்கில் எடுக்கப்பட்ட பணம் மற்றும் நிதி பரிமாற்றங்களின் மொத்தத் தொகை ரூ. பத்தாயிரத்திற்கு (ரூ.10,000/-) மிகாமல் இருக்க வேண்டும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

2.3.4 நிர்ணயிக்கப்பட்ட கிரெடிட் வரம்பான ரூ. 50,000/- மீறப்பட்டால் கணக்கில் உள்ள இருப்புத்தொகை ரூ. 50,000/- அல்லது அதற்கும் குறைவாக இருக்கும் வரை கணக்கில் மேலும் கிரெடிட் பரிவர்த்தனைகள் எதுவும் அனுமதிக்கப்படாது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

2.3.5 ஒரு நிதியாண்டில், அந்த நிதியாண்டின் இறுதி வரை, கணக்கில் உள்ள மொத்த கிரெடிட் ரூ.1,00,000/-ஐத் தாண்டினால், கணக்கில் மேற்கொண்டு கிரெடிட் பரிவர்த்தனைகள் அனுமதிக்கப்படாது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

2.3.6 ஒரு ஆங்கில மாதத்தில் கணக்கில் இருந்து எடுக்கப்பட்ட பணம் மற்றும் நிதி பரிமாற்றங்களின் மொத்தத் தொகை அந்த காலண்டர் மாதத்தின் இறுதி வரை ரூ. 10,000/- ஐத் தாண்டினால், கணக்கில் மேற்கொண்டு டெபிட் பரிவர்த்தனைகள்

TRUE COPY

# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

அனுமதிக்கப்படாது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

2.3.7 BSBDA சிறு கணக்கைத் தொடங்கிய 12 மாதங்களுக்குள் ESFB ஏற்கும் செல்லுபடியாகும் KYC ஆவணங்களுக்கு (ID மற்றும் முகவரிச் சான்று) விண்ணப்பித்ததற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்பதையும், BSBDA சிறு கணக்கைத் தொடங்கிய 24 மாதங்களுக்குள் ESFB-க்கு செல்லுபடியாகும் KYC ஆவணங்களை (ID, முகவரி மற்றும் புகைப்படம்) சமர்ப்பிக்க வேண்டும் என்பதையும், அவ்வாறு செய்யத் தவறினால் எனது கணக்கில் மேலும் பரிவர்த்தனைகளை முடக்க ESFB-க்கு அதிகாரமுள்ளது என்பதையும் நான் புரிந்துகொள்கிறேன்.

2.3.8 மேலே உள்ள எந்த KYC உட்பிரிவுகளுக்கும் இணங்காததால் எனது கணக்கு முடக்கப்பட்டால், நான் கணக்கை மூட வேண்டும் அல்லது KYC தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த பிறகு, ஏதற்கனவே உள்ள BSBDA சிறு கணக்கை BSBDA / வழக்கமான சேமிப்புக் கணக்காக மாற்ற வேண்டும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

2.4 கிராமப்புற சேமிப்பு கணக்கு:

2.4.1 கிராமப்புற சேமிப்புக் கணக்கிற்கு வங்கி டெபிட் கார்டை வழங்காது. மேலும் வங்கி அவ்வப்போது குறிப்பிடும் அதிகாரப்பூர்வ பணி நேரத்தில் கிளை மூலம் அனைத்து பரிவர்த்தனைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

2.5 சேமிப்புக் கணக்குகளின் அனைத்து வேற்றுநிலைகளும்:

2.5.1 RBI-யின் உத்தரவுகளின்படி வணிக நோக்கங்களுக்காக சேமிப்பு வங்கி கணக்கு (SB கணக்கு) தொடங்க முடியாது என்பதை நான் புரிந்துகொள்கிறேன், எனவே SB கணக்கு வணிகம் அல்லாத / வர்த்தகம் அல்லாத பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். அத்தகைய பரிவர்த்தனைகள் அல்லது RBI-யின் ஒழுங்குமுறைகளின்படி சந்தேகத்திற்குரிய, விரும்பத்தகாத அல்லது இணக்கமற்றதாகக் கருதப்படும் அத்தகைய பரிவர்த்தனைகள் ஏதேனும் நடந்தால், அத்தகைய கணக்குகளில் செயல்பாடுகளை ஒருதலைப்பட்சமாக முடக்குவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

3. நடப்புக் கணக்குகள்

3.1 நடப்பிலுள்ள இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்களின்படி, எந்தவொரு நடப்புக் கணக்கையும் தொடங்குவதற்கு, வங்கியின் கிளைகள் அல்லது வேறு ஏதேனும் வங்கியில் ஏற்கனவே இருக்கும் கடன் வசதிகளை அறிவிக்க வேண்டும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். கணக்குத் தொடங்கும் படிவத்தில், அதில் தேவைப்படும் வடிவத்தின்படி, எந்தவொரு வங்கியிலும் பெற்று அனுபவிக்கும் அத்தகைய கடன் வசதிகளின் விவரங்களை நான் அறிவிப்பேன். அத்தகைய வங்கி(களில்) இருந்து தேவையான மறுப்பின்மைச் சான்றிதழை(களை) பெற்று, கணக்கு தொடங்கும் முன் அதனை/அவற்றை உங்களிடம் ஒப்படைக்க நான் உறுதியளிக்கிறேன்.

3.2 வங்கியின் கோரிக்கையின் பேரில், நிபந்தனையின்றி, வங்கி எனக்கு அவ்வப்போது அளிக்கக்கூடிய ஓவர் டிராஃப்ட் தொகைகளை, அதன் மீது சேர்ந்துள்ள வட்டியுடன் சேர்த்து, திருப்பிச் செலுத்த ஒப்புக்கொள்கிறேன். எந்தவொரு கடன் வசதியையும் எனக்கு வழங்குவதற்கு வங்கி கட்டுப்பட்டிருக்கிறது என்பதை இது குறிக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

4. ஃபிக்ஸட் டெபாசிட்

4.1 ESFB அதன் உள்நாட்டு, NRO & NRE டெபாசிட் கணக்குகளுக்கான வட்டியை ஆண்டுக்கு 365 நாட்களின் அடிப்படையில் லீப் ஆண்டு உட்பட அனைத்து வருடங்களுக்கும் கணக்கிடுகிறது என்பதை நான் அறிவேன்.

4.2 உள்நாட்டு மற்றும் NRO டெபாசிட்களில், முன்பதிவு செய்த நாளிலிருந்து 7 நாட்களுக்குள் டெபாசிட் கலைக்கப்பட்டால் வட்டி எதுவும் செலுத்தப்படாது. NRE / FCNR டெபாசிட்டை பொறுத்தவரையில், முன்பதிவு செய்த நாளிலிருந்து 1 வருடம் முடிவதற்குள் டெபாசிட் கலைக்கப்பட்டால் வட்டி எதுவும் செலுத்தப்படாது.

4.3 எனது ஃபிக்ஸட் டெபாசிட் தொகையின் முதிர்ச்சியின் போது, எனது எழுத்துப்பூர்வ நிறைவேற்றல் அறிவுறுத்தல்கள் இல்லாத பட்சத்தில், முதிர்ச்சியடைந்த டெபாசிட் தொகையின் அதே தவணை காலத்திற்கான நடைமுறையில் உள்ள வட்டி விகிதங்களில் அதன் மீதான வட்டியுடன் டெபாசிட் தொகையைப் புதுப்பிக்க வங்கிக்கு உரிமை உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

டெபாசிட் முன்பதிவு செய்யப்பட்ட கிளையைப் பொருட்படுத்தாமல், வங்கியானது ஃபிக்ஸட் டெபாசிட் தொகையை முதிர்வில் அல்லது முன்கூட்டியே பணமெடுக்கும் போது எந்தக் கிளையிலும் செலுத்தும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

4.4 எனது ஃபிக்ஸட் டெபாசிட் தொகையை முன்கூட்டியே பணமெடுக்கும் பட்சத்தில், வங்கி மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறைகளின்படி ஃபிக்ஸட் டெபாசிட் தொகையின் வருவாயில் இருந்து ஏற்கனவே செலுத்தப்பட்ட வட்டி அல்லது அபராதம் ஏதேனும் இருந்தால், திரும்பப்பெற வங்கிக்கு உரிமை உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

4.5 வங்கியின் ஃபிக்ஸட் டெபாசிட் கணக்குகளின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, ஃபிக்ஸட் டெபாசிட்களை முன்கூட்டியே மூடுவதற்கான அபராதம் 1% என்ற விகிதத்தில் வங்கியால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 180 நாட்களுக்கு மேல் உள்ள தவணைக்காலத்தை நிறைவுசெய்து மொத்த டெபாசிட் தொகையாக இல்லாத FD-களுக்கு முன்கூட்டிய அபராதம் பொருந்தாது (28 பிப்ரவரி 2019 அன்று அல்லது அதற்கு முன் முன்பதிவு செய்யப்பட்ட FD <ரூ. 1 கோடி & 1 மார்ச் 2019 அன்று அல்லது அதற்கு பின் முன்பதிவு செய்யப்பட்டது < ரூ. 2 கோடி)

4.6 கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களில் ஒருவர் இறந்துவிட்டால், எஞ்சுனர் உட்பிரிவு இருந்தாலொழிய, டெபாசிட் வருவாயின் உரிமை, எஞ்சி இருக்கும் கூட்டு டெபாசிட் தொகைக் கணக்கு வைத்திருப்பவருக்கு தானாகப் பகிர்ந்தளிக்கப்படாது.

4.7 ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டு டெபாசிட் வைத்திருப்பவர்கள் இறந்துவிட்டால், எஞ்சுனர்(களுக்கான) ஃபிக்ஸட் டெபாசிட் தொகையை முன்கூட்டியே செலுத்துவதன் மூலம் வங்கி சேவை நிறைவேற்றப்படும் என்பதை நான் / நாங்கள் ஒப்புக்கொள்கிறேன்/ ஒப்புக்கொள்கிறோம்.

4.8 டெபாசிட் செய்பவர் இறந்துவிட்டால், கால வரம்புடைய டெபாசிட்களை முன்கூட்டியே கலைக்க அனுமதிக்கப்படும். அத்தகைய முன்கூட்டிய கலைப்புக்கு எந்தவொரு அபராதமும் விதிக்கப்படாது. "இருவரில் ஒருவர் அல்லது எஞ்சியிருப்பவர்" அல்லது "முன்னவர் அல்லது எஞ்சியிருப்பவர்" என்பதன் கீழ் டெபாசிட் தொகையாளர்களில் ஒருவர் இறந்துவிட்டால், இறந்தவரின் சட்டப்பூர்வ வாரிசுகளின் உடன்பாட்டைப் பெறாமல், முன்கூட்டிய மூடல் செய்து டெபாசிட் தொகையை பணமெடுக்க எஞ்சியவரின் கோரிக்கைக்கு மதிப்பளிக்க வங்கிக்கு உரிமையுண்டு. வங்கியால் செலுத்தப்படும் அத்தகைய பணம் வங்கியின் பகுதியிலிருந்து செல்லுபடியாகும் நிறைவேற்றம் ஆகும். மேற்கூறிய கால வரம்புடைய டெபாசிட் தொகைகளின் கீழ் கூட்டு வைத்திருப்பவர்களாகிய நாங்கள், மேற்கூறியவற்றிற்கு எங்களது ஒப்புதலை இதன்மூலம் உறுதிப்படுத்துகிறோம்.

4.9 ஸ்வீப்-இன் செய்வதற்காக எனது டெபாசிட்களை நான் சேமிப்புக் கணக்கில் இணைக்கும் பட்சத்தில், கணக்கில் உள்ள பற்றாக்குறையின் அளவிற்கு ரூ.1 யூனிட்களில் எனது டெபாசிட்களை பிரிக்க வங்கிக்கு அதிகாரமளிக்கிறேன். உங்கள் ஃபிக்ஸட் டெபாசிட் தொகையிலிருந்து (FD) சேமிப்பு / நடப்புக் கணக்கிற்கு நிதியை ஸ்வீப்-இன் செய்வது லாஸ்ட் இன் ஃபர்ஸ்ட் அவுட் அடிப்படையில் (LIFO) நடக்கும்.

4.10 சுயமாகவோ அல்லது மூன்றாம் தரப்பினரோ செய்யும் டெபாசிட் மீது ஏதேனும் பற்றுரிமை இருந்தால், முதிர்வு அறிவுறுத்தலைப் பொருட்படுத்தாமல் அவ்வப்போது பொருந்தும் விகிதங்களின்படி அதே கால அவகாசத்திற்கு டெபாசிட் கட்டாயம் புதுப்பிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

4.11 முன்கூட்டியே பணமெடுக்கப்பட்டால், வங்கியில் டெபாசிட் செய்து வைத்திருக்கும் தொகை மற்றும் காலத்திற்கு பொருந்தக்கூடிய விகிதத்தில் வட்டி செலுத்தப்படும், ஒப்பந்த விகிதத்தில் அல்ல.

4.12 ரூ. 2 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புக்கு பதிவு செய்யப்பட்ட அனைத்து நிலையான டெபாசிட்களும் 1 மார்ச் 2019 முதல் மொத்த டெபாசிட் தொகையாகக் கருதப்படும்.

5. ரெக்கரிங் டெபாசிட்

5.1 ரெக்கரிங் டெபாசிட் தொகைக்கான வட்டி விகிதங்கள் ஃபிக்சட் டெபாசிட் தொகைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய அதே விகிதமாக இருக்கும் என்பதையும், டெபாசிட் தொகைகளின் வட்டியானது காலாண்டு இடைவெளியில் கூட்டப்படும் என்பதையும் நான் அறிவேன்.

5.2 ரெக்கரிங் டெபாசிட் தொகை (உள்நாட்டு) மீதான ஒரு மாத கால லாக்-இன் -ஐ நான் ஒப்புக்கொள்கிறேன், மேலும் ஒரு மாதத்திற்குள் முன்கூட்டியே மூடப்பட்டால், எனக்கு வட்டி எதுவும் செலுத்தப்படாது.

5.3 NRE ரெக்கரிங் டெபாசிட் தொகை மீதான ஒரு ஆண்டு கால லாக்-இன் ஐ நான் ஒப்புக்கொள்கிறேன், மேலும் ஒரு மாதத்திற்குள் முன்கூட்டியே மூடப்பட்டால், எனக்கு வட்டி எதுவும் செலுத்தப்படாது.

5.4 ஒருமுறை நிர்ணயிக்கப்பட்ட தவணைத் தொகையை பிற்காலத்தில் மாற்ற அனுமதிக்கப்படாது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

5.5 பணம் செலுத்தும் நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தவணைகள் கெடு கடந்ததாக இருந்தால், ஒரு தவணையை மட்டும் ஈடுசெய்ய போதுமானதாக இருந்தால், செலுத்தப்பட்ட தவணையானது முதல் / ஆரம்ப கெடு கடந்த தவணைக்கு ஒதுக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

5.6 தவணைகளை பகுதியளவு செலுத்த அனுமதிக்கப்படாது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

5.7 அந்த மாதத்திற்கான பணம் செலுத்தப்பட்டாலும், தவணை மீளப் பெறுவதற்கான நிலையான அறிவுறுத்தல் தோல்வியடைந்தால், நிலையான அறிவுறுத்தல் தோல்விக்கான கட்டணத்தை வங்கி மீட்டெடுக்கும்.

5.8 எந்தவொரு தவணையையும் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டால், நான்/நாங்கள் ரெக்கரிங் டெபாசிட் வட்டி விகிதத்தில் அபராத வட்டியை செலுத்த வேண்டியிருக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் (RD முன் பதிவு செய்யும் போது ஒப்பந்த வட்டி விகிதம்) + ஆண்டுக்கு 2% அல்லது தாமதத்தின் உண்மையான காலத்திற்கு அவ்வப்போது ESFB-ஆல் குறிப்பிடப்படும் மற்ற விகிதம்.

5.9 அபராதக் கட்டணங்கள் 30/360 அடிப்படையில் கணக்கிடப்படும் என்பதை நான் அறிவேன்.

5.10 டெபாசிட்களை முன்கூட்டியே மூடுவதற்குப் பொருந்தும் வட்டி விகிதம் (அனைத்துத் தொகைகளும்) டெபாசிட் முன்பதிவு செய்யப்பட்ட அசல்/ஒப்பந்த காலத்துக்கான விகிதத்தை விட குறைவானதாக அல்லது முன்கூட்டியே மூடப்பட்ட தேதியின்படி காலத்திற்கு பொருந்தும் விகிதம் என இருக்கும் என்பதை நான் அறிவேன்.

5.11 இலக்கு அடிப்படையிலான RD: இலக்கு அடிப்படையிலான RD-க்கு, இலக்கை அடைந்தவுடன் அல்லது அதிகபட்ச கால அளவை அடைந்தவுடன், இரண்டில் எது முந்தையதோ, அது தொடர்வது நிறுத்தப்படும் என்பதை நான் அறிவேன். RD-இன் முதிர்வு, இலக்கை அடையும் போது அல்லது கால அளவு முடிந்தவுடன் இரண்டில் எது முந்தையதோ, அப்போது இணைக்கப்பட்ட சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

5.11.1 சேமிப்பின் இலக்கை அடைய எனது இலக்கு அடிப்படையிலான RD-ஐ டாப்-அப் செய்வதற்கு வங்கி அதன் விருப்பப்படி என்னை அனுமதிக்கும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

5.11.2 டாப்-அப் ஏற்பட்டால், டெபாசிட் செய்த நாளிலிருந்து முதிர்வு வரை வட்டி வழங்கப்படும்.

5.11.3 ஃப்ளெக்ஸி RD: தினசரி / வாராந்திர இரு வாரங்களுக்கொரு முறை / மாதாந்திர அடிப்படையில் எனது

TRUE COPY

# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

equitas
Equitas Small Finance Bank

ஃப்ளெக்ஸி RD-ஐ டாப்-அப் செய்ய வங்கி அதன் விருப்பப்படி என்னை அனுமதிக்கிறது என்பதை நான் புரிந்துகொள்கிறேன். டாப்-அப் செய்தால், டெபாசிட் செய்த நாளிலிருந்து முதிர்வு வரை வட்டி செலுத்தப்படும்.

5.12 முன்கூட்டியே பணமெடுக்கப்பட்டால், வங்கியில் டெபாசிட் செய்து வைத்திருக்கும் தொகை மற்றும் காலத்திற்கு பொருந்தக்கூடிய விகிதத்தில் வட்டி செலுத்தப்படும், ஒப்பந்த விகிதத்தில் அல்ல.

6. டெபிட் கார்டுகள்

6.1 கட்டணங்கள்: ATM-இல் பயன்படுத்தக்கூடிய கார்ட் தொடர்பான அனைத்து கட்டணங்கள் / வரிகள் / சர்சார்ஜ்கள் / சேவைக் கட்டணங்கள் மற்றும் பிற அனைத்து வரிகளும் எனது/எங்களது கணக்கில் டெபிட் செய்வதன் மூலம் வங்கியால் திரும்பப் பெறப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

6.2 பரிவர்த்தனைகளின் பொறுப்பு: எனது ATM-இல் பயன்படுத்தக்கூடிய கார்டைப் பயன்படுத்தி செயலாக்கப்படும் அனைத்து வகையான பரிவர்த்தனைகளுக்கும் நான் பொறுப்பாவேன், எனக்குத் தெரிந்து அல்லது அதிகாரத்துடன் செயலாக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும், வெளிப்படுத்தப்பட்டாலும் அல்லது மறைமுகமாக இருந்தாலும். வங்கியின் பரிவர்த்தனைகள் பற்றிய பதிவேடுகளை அனைத்து நோக்கங்களுக்காகவும் இறுதியானதாகவும் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

6.3 PIN: ATM-களில் கார்டைப் பயன்படுத்துவதற்கு, எனக்கு ஒரு தனிப்பட்ட அடையாள எண் (PIN) வழங்கப்படும். PIN எனக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும், அது சீல் செய்யப்பட்ட உறையில் பெறப்படுவதை உறுதி செய்வேன். PIN-ஐ, என் சொந்த பொறுப்பில், ATM-இல் நான் மாற்றலாம். PIN-இன் செக்யூரிட்டி மிகவும் முக்கியமானது மற்றும் நான் அதை இரகசியமாக வைத்திருக்க வேண்டும் மற்றும் எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் சொல்லக்கூடாது. இந்த செக்யூரிட்டி தேவைகளை நான் கடைப்பிடிக்கத் தவறினால், அதனால் ஏற்படும் எந்த பின்விளைவுகளுக்கும் நான் பொறுப்பாவேன். வங்கி தனது விருப்பத்தின் பேரில் க்ரீன் PIN / காகிதமற்ற PIN வழங்கலாம், இதில் வாடிக்கையாளர் தனது சொந்த PIN-ஐ அமைப்பதற்கு முன் வங்கியின் பல்வேறு சேவை விநியோக சேனல்களான கிளை / ATM / இணையம் / மொபைல் / ஃபோன் பேங்கிங்கை பயன்படுத்தி தன்னை அடையாளம் காண ஒப்புக்கொள்கிறார்.

6.4 கார்டின் செல்லுபடியாகும் தன்மை: எல்லா நேரங்களிலும் ATM-இல் பயன்படுத்தக்கூடிய கார்டு வங்கியின் சொத்து என்பதை ஒப்புக்கொள்கிறேன். ATM-இல் பயன்படுத்தக்கூடிய கார்டின் செல்லுபடியாகும் காலம் கார்டின் முகப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும், கணக்கு முடக்கப்படும் பட்சத்தில் அல்லது ஏதேனும் காரணத்திற்காக வங்கி கோரும் போதெல்லாம் கார்டை வங்கியிடம் ஒப்படைக்க ஒப்புக்கொள்கிறேன்.

6.5 தொலைந்துபோன கார்டு: ATM-இல் பயன்படுத்தக்கூடிய எனது கார்டு தவறவிடப்பட்டாலோ, திருடப்பட்டாலோ அல்லது தொலைந்து போனாலோ, நிகழ்வை வங்கிக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க / ஃபோன் பேங்கிங்கை அழைக்க ஒப்புக்கொள்கிறேன். கார்டு தொலைந்துவிட்டதாக/திருடப்பட்டதாக நான் புகாரளிப்பதற்கு முன், கார்டை தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் எந்த இழப்புக்கும் வங்கி பொறுப்பேற்காது.

6.6 அட்டையின் பாதுகாப்பு: வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரிக்கு கார்டு அனுப்பப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ATM-இல் பயன்படுத்தக்கூடிய கார்டைப் பாதுகாப்பாக வைத்திருக்க ஒப்புக்கொள்கிறேன் மற்றும் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் எவருக்கும் அட்டையை ஒப்படைக்க மாட்டேன் என்று ஒப்புக்கொள்கிறேன். கார்டு தொலைந்துவிட்டதாக/திருடப்பட்டதாக நான் புகாரளிப்பதற்கு முன், கார்டை தவறாகப் பயன்படுத்தினால் அதற்கு வங்கி பொறுப்பாகாது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

6.7 ATM பரிவர்த்தனைகள் காரணமாக கணக்கில் தவறான பதிவுகள்: நான் செய்த ATM பரிவர்த்தனைகளுக்காக எனது கணக்கில் தவறான பதிவு டெபிட் செய்யப்பட்டிருப்பதை நான் கவனித்தால், எனது கணக்கு பராமரிக்கப்படும் கிளையில் (கணக்கு கிளை) உடனடியாக பிரச்சினையை எழுப்புவேன். வங்கி விசாரித்து அதன் கண்டுபிடிப்புகள் குறித்து எனக்கு தெரிவிக்கும் மற்றும் வங்கியின் முடிவானது இறுதியானது மற்றும் என்னைக் கட்டுப்படுத்தும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

6.8 ஏதேனும் தகராறு ஏற்படும் பட்சத்தில், ஆடிட் ட்ரெயில் இறுதியாகவும் முடிவாகவும் இருக்கும்: ஏதேனும் தகராறு ஏற்பட்டால், ATM-இன் ஆடிட் ட்ரெயில்-ஐ (அச்சிடப்பட்ட / திருத்த முடியாத மின்னணு வடிவத்தில்) வங்கி அனைத்து தகராறுகளிலும் இறுதி மற்றும் முடிவான ஆதாரமாகப் பயன்படுத்தும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆடிட் ட்ரெயில்-இன் பதிவுகளைக் கடைப்பிடிக்க ஒப்புக்கொள்கிறேன்.

6.9 ATM-இலிருந்து எனக்கு சிதைந்த / கிழிந்த / வெட்டப்பட்ட நாணயத் தாள் (தாள்களை) கிடைக்கும் பட்சத்தில், நான் கணக்குக் கிளைக்குச் சென்று, கடிதம் மற்றும் பரிவர்த்தனை சீட்டைச் சமர்ப்பித்து, ATM-இல் பரிவர்த்தனை செய்ததை உறுதிசெய்து குறிப்புகளை பரிமாற்றுவேன். வேறு எந்த வகையான கோரிக்கையும் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

6.10 ATM /டெல்லர் கவுன்டர் மூலம் நான் செய்யும் டெபாசிட்டில் போலியான / சிதைக்கப்பட்ட / கிழிந்த நோட்டை வங்கி கண்டறிந்தால், போலியான / சிதைக்கப்பட்ட / கிழிந்த நோட்டின் மதிப்புக்கு இணையான கிரெடிட்டை வங்கி எனக்கு வழங்காது.

மேலும் வங்கியானது போலியான நோட்டைத் திரும்பக் கொடுக்காது என்பதை நான் புரிந்துகொள்கிறேன். இருப்பினும், எனது எழுத்துப்பூர்வ கோரிக்கையின் அடிப்படையில், சிதைந்த / கிழிந்த நோட்டை வங்கி என்னிடம் திருப்பி கொடுக்கும். மேலும் இந்திய ரிசர்வ் வங்கி வழங்கிய வழிகாட்டுதல்களின்படி, அதிகாரிகளிடம் புகாரளிப்பதற்கான அனைத்து தேவைகள் / வழிகாட்டுதல்களுக்கும் வங்கி இணங்கும்.

6.11 டெபிட் கார்டை புதுப்பிக்க வேண்டியிருக்கும் போது, எனது புதுப்பித்த கார்டை அனுப்புவதற்கு முன்பு வங்கிக்குத் தெரிவித்து, அதை நிராகரிப்பதற்கான விருப்பத்தேர்வு எனக்கு உள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன். கார்டை அனுப்புவதை நிறுத்த காலாவதி தேதிக்கு குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்பு நான் வங்கியின் கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது அவர்களின் வாடிக்கையாளர் பராமரிப்பு அஞ்சல் ID-க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

6.12. தகவல் வெளிப்படுத்துதல்: முன் நிபந்தனையாக, நான் செய்த டெபிட் கார்டு பரிவர்த்தனையின் அடிப்படையில் ரிவார்டு பாயிண்ட்டுகளை வழங்குவதற்காக, வங்கிக்கு நான் பகிர்ந்த தகவல் மற்றும் தரவை வெளிப்படுத்துவதற்கு வங்கிக்கு எனது ஒப்புதல் தேவை என்பதை நான் புரிந்துகொள்கிறேன். வங்கி அதன் வாடிக்கையாளர்களின் தரவுப் பாதுகாப்பு குறித்து நடப்பிலுள்ள சட்டம் மற்றும் சட்டப்பூர்வ வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதை நான் அறிவேன்.

6.13. டெபிட் கார்டை புதுப்பிக்க வேண்டியிருக்கும் போது, எனது புதுப்பித்த கார்டை அனுப்புவதற்கு முன்பு வங்கிக்குத் தெரிவித்து, அதை நிராகரிப்பதற்கான விருப்பத்தேர்வு எனக்கு உள்ளது என்பதை அறிவேன். இந்த அறிவிப்பிற்கு எனது டெபிட் கார்டின் காலாவதி தேதிக்கு 30 நாட்களுக்கு முன், கார்டு அனுப்புவதை நிறுத்த நான் வங்கியின் கட்டணமில்லா எண்ணை தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியின் வாடிக்கையாளர் பராமரிப்பு மின்னஞ்சல் ID-க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

6.14. எனது கணக்குடன் இணைக்கப்பட்ட தொடர்புடைய கார்டுகள் & சேனல் அணுகல், கணக்கு "மூடப்பட்டது" எனக் குறிக்கப்பட்டவுடன் நிரந்தரமாக முடக்கப்படலாம் என்பதை அறிவேன்

7. சர்வதேச டெபிட்கார்ட்

7.1 முக்கியமான ரிசர்வ் வங்கி (RBI) ஆணை: நடைமுறைக்கு வந்த தேதி 1 டிசம்பர் 2013,

- இந்தியாவில் உள்ள எந்தவொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் வாடிக்கையாளர் தனது ESFB டெபிட் கார்டைப் பயன்படுத்தும் போது அவரது ATM PIN-ஐப் பயன்படுத்த வேண்டும்.
- தவறான பின் அல்லது பின் இல்லாத பரிவர்த்தனைகள் நிராகரிக்கப்படும்.

7.2 கார்டின் பயன்பாடு இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) பரிவர்த்தனை கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகளின்படி கண்டிப்புடன் இருக்க வேண்டும். கார்டு வைத்திருப்பவர் அதை கடைபிடிக்காத பட்சத்தில், FEMA, 1999 மற்றும் அந்நிய செலாவணி தொடர்பாக அவ்வப்போது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டம் மற்றும்/அல்லது ஒழுங்குமுறையின் கீழ் நடவடிக்கை எடுக்க கார்டு வைத்திருப்பவர் பொறுப்பாவார்.

வங்கி அல்லது RBI-இன் வேண்டுகோளின்படி, கார்டு வைத்திருப்பவர் சர்வதேச அளவில் செல்லுபடியாகும் டெபிட் கார்டை வைத்திருப்பதில் இருந்து தடைசெய்யப்படலாம். கார்டு இந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியேயும் பயன்படுத்த செல்லுபடியாகும், ஆனால் நேபாளம் மற்றும் பூட்டானில் அன்னியச் செலாவணியில் பணம் செலுத்துவதற்கு செல்லுபடியாகாது" என்ற வாசகம் இருக்கும். பரிவர்த்தனை கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகளுக்கு இணங்காத காரணத்தினாலோ அல்லது வேறு வகையிலோ, கார்டு ரத்து செய்யப்பட்டால், இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ கார்டை பயன்படுத்த முயற்சித்தால் வங்கி அதற்கு பொறுப்பாகாது. மேலும் கார்டு ஏற்கப்படாது என்பதோடு வழங்கப்படும்போது ரத்து செய்யப்பட்ட கார்டை "கைப்பற்ற / பறிமுதல்" செய்ய சம்பந்தப்பட்ட வணிகருக்கு உரிமை உண்டு.

7.3 நடப்பிலுள்ள ஒழுங்குமுறைகளின் கீழ் பரிவர்த்தனை வெளியீடு அனுமதிக்கப்படாத பணம் அனுப்புவதற்கு கார்டைப் பயன்படுத்த முடியாது.

7.4 செல்லுபடியாகும் காலம்: குறிப்பிட்ட மாதத்தின் கடைசி பணி நாள் வரை கார்டு செல்லுபடியாகும். கார்டு வைத்திருப்பவர், கார்டு காலாவதியாகும் போது அதை குறுக்காக பாதியாக வெட்டி அழிக்க வேண்டும். வங்கி உங்களின் புதுப்பிக்கப்பட்ட கார்டை அனுப்பி, கார்டு காலாவதியாகும் முன், வங்கியின் அமைப்பில் பதிவுசெய்யப்பட்ட முகவரியில் கார்டை டெலிவரி செய்ய முயற்சிக்கும்.

7.5 கார்டு வைத்திருப்பவரின் கடமைபொறுப்புகள்: கார்டு வைத்திருப்பவர் எல்லா நேரங்களிலும் கார்டை பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். கார்டு வைத்திருப்பவர் எந்தச் சூழ்நிலையிலும் கார்டை வேறு எந்தத் தனிநபராலும் பயன்படுத்தப்பட அனுமதிக்கக் கூடாது. கார்டு வைத்திருப்பவர் அதைப் பெற்றவுடன் கார்டின் பின்புறத்தில் கையொப்பமிடுவார்.

கார்டு வைத்திருப்பவர் எந்தச் சூழ்நிலையிலும் தனிப்பட்ட அடையாளம், CVV எண் அல்லது கார்டு தொடர்பான வேறு ஏதேனும் தனிப்பட்ட அடையாள எண்ணை யாரிடமும் நேரிலோ அல்லது தொலைபேசியிலோ பகிரவோ அல்லது வெளியிடவோ கூடாது.

7.6 RBI வழிகாட்டுதல்களின்படி, இந்தியாவிற்கு வெளியே சர்வதேச டெபிட் கார்டுகள் மூலம் ATM /பாயின்ட் ஆஃப் சேல் பரிவர்த்தனைகள் அல்லது சர்வதேச இணையதளத்தில் பரிவர்த்தனை செய்வதற்கு PAN கட்டாயமாகும். உங்கள் எக்விடாஸ் VISA டெபிட் கார்டுக்கான உங்கள் PAN எண்ணைச் சமர்ப்பிப்பதன் மூலம் சர்வதேச பயன்பாட்டைச் செயல்படுத்தவும். உங்கள் அருகிலுள்ள கிளைக்குச் செல்லவும் அல்லது 1800 1031222 என்ற எண்ணில் வாடிக்கையாளர் சேவையைத் தொடர்பு கொள்ளவும்.

8. ஃபோன் பேங்கிங்

8.1 ஃபோன் பேங்கிங் / ஃபோன் பேங்கிங் சேவை என்பது ESFB-இன் ஃபோன் பேங்கிங் சேவையைக் குறிக்கிறது. இதன்படி ESFB அதன் வாடிக்கையாளரின் கணக்கு(கள்) தொடர்பாக அதன் வாடிக்கையாளருக்கு மற்றும் ESFB ஏற்பாடுகளை செய்துள்ள பிற நிறுவனங்களுக்கு தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது பிற அமைப்புகள் மூலம் ESFB-இன் திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல் அளித்து பரிவர்த்தனைகளை எளிதாக்கும்.

8.2 விதிமுறை என்பது ஃபோன் பேங்கிங் சேவையை விண்ணப்பித்து முதல் முறையாக சேவையை அணுகுவதன் மூலம் ஃபோன் பேங்கிங்கைப் பயன்படுத்துவதற்கான

TRUE COPY

# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

equitas
Equitas Small Finance Bank

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் குறிக்கிறது. இந்த விதிமுறைகளை நான் ஒப்புக்கொண்டு ஏற்கிறேன். வங்கியின் இணையதளமான www.equitasbank.com-இல் குறிப்பிட்டுள்ளபடி அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் அனைத்து விரிவான ∴போன் பேங்கிங் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் ஏற்கிறேன். இதில் உள்ள எதையும் பொருட்படுத்தாமல், கணக்கு(கள்) தொடர்பாக ESFB வழங்கிய அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் தொடர்ந்து பொருந்தும்.

8.3 கணக்கு(களில்) இருப்புத்தொகை பற்றிய விசாரணை, கணக்கு(கள்) ஸ்டேட்மெண்ட் மற்றும் / அல்லது காசோலை புத்தகங்களுக்கான கோரிக்கை, எனது கிரெடிட் கார்டில் உள்ள பல்வேறு சேவைகள், எனது கிரெடிட் கார்டு கணக்கு, கணக்கு ஸ்டேட்மெண்ட் மற்றும் ESFB லிமிடெட் அவ்வப்போது முடிவு செய்யக்கூடிய பிற வசதிகள் பற்றிய விசாரணை உட்பட ஆனால் அவை மட்டுமே அல்லாத பல்வேறு சேவைகளை ESFB ∴போன் பேங்கிங் சேவை மூலம் எனக்கு வழங்க முயற்சிக்கும்.

8.4 24 மணிநேர ஊடாடும் வாய்ஸ் பதிலளிப்பு அமைப்பு மற்றும்/அல்லது ஒரு ∴போன் பேங்கர் மூலம் அறிவுறுத்தல்களை வழங்குவதன் மூலம் ∴போன் பேங்கிங் சேவையை வழங்க ESFB ஒப்புக்கொண்டுள்ளது என்பதை நான் அறிவேன் மற்றும் ஏற்றுக்கொள்கிறேன். ∴போன் பேங்கர் உதவி சேவை பணி நேரங்கள் ESFB-இன் இணையதளம் மற்றும் பிற ஏற்றுக்கொள்ளக்கூடிய தகவல் தொடர்பு முறைகளில் தெரிவிக்கப்பட்டு புதுப்பிக்கப்படும்.

8.5 ESFB எனக்கு வழங்கும் 4-இலக்க TIN மற்றும் / அல்லது ஒரு முறை கடவுச்சொல்லை (OTP) இரகசியம் காப்பேன் மற்றும் அது இரகசியமாக வைக்கப்படுவதை உறுதிசெய்வேன். ∴போன் பேங்கிங் IVR-ஐப் பயன்படுத்தி, எனது சொந்தப் பொறுப்பில், TIN-ஐ நான் மாற்றலாம். தானாக முன்வந்து, தற்செயலாக அல்லது தவறுதலாக, எந்தவொரு பணியாளர் அல்லது ESFB பிரதிநிதி உட்பட எந்த அங்கீகரிக்கப்படாத நபரையும் TIN-ஐ அணுக அனுமதிக்க மாட்டேன். நான் TIN-ஐ மறந்துவிட்டாலோ / தொலைத்துவிட்டாலோ அல்லது TIN ரகசியமாக இல்லை என்றாலோ, ESFB-க்கு உடனடியாகத் தெரிவிக்க பொறுப்பேற்கிறேன்.

8.6 ∴போன் பேங்கிங் சேவையைப் பெறுவதற்கு, (a) வாடிக்கையாளர் அடையாள எண் மற்றும் ∴போன் அடையாள எண் (TIN) அல்லது (b) டெபிட் கார்டு மற்றும் அதனுடன் தொடர்புடைய தனிப்பட்ட அடையாள எண் (PIN) மற்றும் / அல்லது ESFB அவ்வப்போது முடிவு செய்யும் நடைமுறைகளின்படி வேறு ஏதேனும் சரிபார்ப்பு முறை ஆகியவற்றை வெற்றிகரமாகச் உறுதி செய்வதன் மூலம் ∴போன் பேங்கிங் முறைக்கு என்னை நானே அடையாளம் காண்பிக்க வேண்டும் என்பதை நான் அறிவேன் மற்றும் ஏற்றுக்கொள்கிறேன். வெற்றிகரமான சரிபார்ப்புக்குப் பிறகு, அவ்வப்போது ESFB-ஆல் தீர்மானிக்கப்பட்ட நடைமுறைகளின்படி செய்யப்படும் நிதிசார் பரிவர்த்தனைகள் உள்ளிட்ட, பரிவர்த்தனைகள், என்னைக் கட்டுப்படுத்தும் மற்றும் ஏதேனும் தகராறு ஏற்பட்டால், அது தொடர்பான பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

8.7 ∴போன் பேங்கிங் சேவை அவ்வப்போது ESFB-ஆல் குறிப்பிடப்பட்ட நேரத்தில் செயல்படும் என்பதையும், பரிவர்த்தனை பதிவு செய்யும் நேரத்தைப் பொறுத்து அதே நாளில் அல்லது அடுத்த பணி நாளில் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் அறிவேன் மற்றும் ஏற்றுக்கொள்கிறேன்.

8.8 வங்கியின் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுவதன் பின்விளைவாக ஏற்படக்கூடிய அனைத்து இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு எதிராகவும் வங்கிக்கு இழப்பீடு வழங்குவேன்.

9. இணைய வங்கி செயல்பாடுகள் (நெட் பேங்கிங்)

9.1 அடிப்படை நெட் பேங்கிங் சேவைகள்/பதிவு செய்தல், வாடிக்கையாளர்களுக்கு வங்கியில் கணக்கு/டெபாசிட் தொடங்கும் போது, அத்தகைய சேவைகளை செயல்படுத்துவதற்கான எந்த நடைமுறைகளையும் பூர்த்தி செய்யாமல் கிடைக்கப்பெறும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். நெட் பேங்கிங் சேவையின் விதிமுறைகளும் நிபந்தனைகளும், கணக்கு தொடங்குவதற்குப் பொருந்தக்கூடிய விதிமுறைகளுடன் கூடுதலாகப் பொருந்தும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சொல் மூலம் நான் நெட் பேங்கிங்கில் உள்நுழைய வேண்டும். உள்நுழைந்த பின் கடவுச்சொல்லை மாற்றிவிடுவேன்.

9.2 நெட் பேங்கிங் சேவைகள் என்பது வங்கியின் ஆலோசனையின்படி கணக்குத் தகவல், திட்டங்கள் மற்றும் பிற சேவைகள் (நிதி அல்லாத மற்றும் நிதி சார்ந்த பரிவர்த்தனைகள் உட்பட) அணுகலை வங்கியின் இணையதளம் மூலம் வாடிக்கையாளர்களுக்கு அவ்வப்போது வழங்கப்படும் வங்கியின் சேவையாகும் (அத்தகைய சேவைகளின் அனைத்து மாற்றங்களும் உட்பட) என்பதை புரிந்துகொள்கிறேன்.

9.3 நான் ESFB தளங்களில் இருந்து நேரடியாக உள்நுழைய வேண்டும் மற்றும் எனது வாடிக்கையாளர் ID & IPIN (கடவுச்சொல்) மற்றும் அத்தகைய கணக்கு முக்கிய விவரங்களை யாருடனும் அஞ்சல் மூலமாகவோ அல்லது அழைப்பு மூலமாகவோ அல்லது வேறு எந்த ஊடகம் மூலமாகவோ பகிரக்கூடாது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

9.4 எனது வாடிக்கையாளர் ID மற்றும் IPIN-ஐ மூன்றாவது நபர் அணுகினால், அத்தகைய மூன்றாவது நபர் வங்கிக்கு பணம் செலுத்துவதற்கான வழிமுறைகள்/மற்ற வழிமுறைகளை வழங்க முடியும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

9.5 வங்கிகளின் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் மீறுவதன் பின்விளைவாக ஏற்படக்கூடிய அனைத்து இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு எதிராகவும் வங்கிக்கு இழப்பீடு வழங்குவேன்.

9.6 நெட் பேங்கிங் மற்றும் நெட் பேங்கிங்கில் கிடைக்கும் பல்வேறு சேவைகளுக்கு பொருந்தும் வகையில் தொடர்புடைய கட்டணங்கள், தீர்வைகள் அல்லது பிற கட்டணங்கள் இருக்கும்.

9.7 வங்கியின் இணையதளமான www.equitasbank.com-இல் குறிப்பிட்டுள்ளபடி, அவ்வப்போது நடைமுறையில் உள்ள அனைத்து விரிவான நெட் பேங்கிங் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான் ஒப்புக்கொள்கிறேன்.

9.8 கடவுச்சொற்கள், CVV, OTP (ஒரு முறை கடவுச்சொற்கள்) உள்ளிட்ட எனது முக்கியமான கணக்குத் தகவல்களை மூன்றாம் நபர்களுடன் பகிர்ந்து கொள்ள மாட்டேன்.

10. கைபேசி மூலமாக செய்யப்படும் வங்கி செயல்பாடுகள் (மொபைல் பேங்கிங்)

10.1 மொபைல் பேங்கிங் அல்லது SMS பேங்கிங் என்பது வாடிக்கையாளரின் மொபைல் ∴போனில் வங்கியிடமிருந்து அவ்வப்போது / மொபைல் பேங்கிங் மூலம் அறிவுறுத்தப்படக்கூடிய அல்லது கிடைக்கக்கூடிய சேமிப்பு / நடப்புக் கணக்கு(கள்) / ∴பிக்ஸ்ட் டெபாசிட் மற்றும் திட்டங்கள் மற்றும் / அல்லது பிற சேவைகளின் பயன்பாடு தொடர்பான தகவல்களை அணுகுவதற்கான வசதி ஆகும். இந்த ஆவணத்தில் மொபைல் பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் சேவைகள் என்ற வார்த்தைகள் ஒன்றுக்கொன்று மாற்றாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

10.2 சேமிப்பு மற்றும் அல்லது நடப்பு மற்றும் அல்லது ∴பிக்ஸட் டெபாசிட் கணக்கை தனியாகவோ அல்லது இருவரில் ஒருவர் அல்லது எஞ்சியிருப்பவர் என்ற அடிப்படையில் மற்றும் CSP-இன் தற்போதைய சந்தாதாரராகவோ செயல்பட அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் எந்தவொரு வாடிக்கையாளரும். பயனருக்கு மொபைல் ∴போனுக்கான அணுகல் மற்றும் மொபைல் ∴போன் எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றிய அறிதல் இருக்க வேண்டும். மொபைல் பேங்கிங்கைப் பயன்படுத்துவதற்குத் தேவையான மொபைல் ∴போன் மென்பொருளை பயனர் எப்போதும் வைத்திருக்க வேண்டும். மைனர் கணக்குகளுக்கு, மைனரின் இயற்கையான காப்பாளர் மட்டுமே இந்தச் சேவையைப் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

10.3 எனது விண்ணப்பம் முறையாக இருப்பதாகக் காணப்பட்டு, வங்கி மற்றும் CSP மூலம் தொடர்புடைய விவரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே மொபைல் வங்கிச் சேவையைப் பயன்படுத்த எனக்கு உரிமை உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன். எந்த காரணமும் கூறாமல் எனது விண்ணப்பத்தை நிராகரிக்க வங்கி மற்றும் CSP-க்கு உரிமை உண்டு.

10.4 வங்கி அவ்வப்போது முடிவு செய்யக்கூடிய சேவைகளை மொபைல் பேங்கிங் மூலம் பயனருக்கு வழங்க வங்கி முயற்சி எடுக்கும். ஒவ்வொரு கணக்கிலும் ஒரு வகை பயனருக்கு வழங்கப்படக்கூடிய மற்றும் வகைக்கு வகை வேறுபடும் சேவைகளின் வகையைத் தீர்மானிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. வங்கி தனது சொந்த விருப்பத்தின் பேரில் மொபைல் பேங்கிங் மூலம் வழங்கப்படும் சேவைகளில் சேர்த்தல் / நீக்குதல்களைச் செய்யலாம்.

10.5 வங்கியில் தொடங்கப்பட்டு அந்தந்த பயனர் ID உடன் இணைக்கப்பட்ட கணக்குகளை மட்டுமே மொபைல் பேங்கிங் மூலம் அணுக முடியும்.

10.6 மொபைல் பேங்கிங் மூலம் என்னால் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளை செயல்படுத்துவதற்காக நான் வங்கிக்கு வெளிப்படையான அதிகாரத்தை வழங்குகிறேன். மொபைல் ∴போன் எண்ணை உறுதிசெய்தைத் தவிர, மொபைல் பேங்கிங் மூலமாக என்னிடமிருந்து பெறப்பட்ட அல்லது மொபைல் பேங்கிங் மூலம் என்னால் அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்ட எந்தவொரு பரிவர்த்தனையின் நம்பகத்தன்மையையும் உறுதிசெய்ய வங்கிக்கு எந்த கடமைபொறுப்பும் இல்லை. மொபைல் பேங்கிங் செயல்பாட்டின் போது நான் தயாரித்து வழங்கிய டிஸ்ப்ளே ஆனது, மொபைல் அணுகலின் செயல்பாடுகளின் பதிவாகும் மற்றும் தொடர்புடைய பரிவர்த்தனைகளின் வங்கியின் பதிவுகளாகக் கருதப்படாது. கணினி அமைப்புகள் மூலமாகவோ அல்லது வேறுவிதமாகவோ பராமரிக்கப்படும் பரிவர்த்தனைகளின் வங்கியின் சொந்தப் பதிவுகள், குறிப்பிட்ட கால ஸ்டேட்மெண்டைப் பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் ஏதேனும் முரண்பாட்டை நான் சுட்டிக்காட்டாவிட்டாலொழிய, அனைத்து நோக்கங்களுக்காகவும் இறுதியானதாகவும் பிணைக்கப்பட்டதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஒரு கூட்டுக் கணக்கில், மொபைல் பேங்கிங்கைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அனைத்து பரிவர்த்தனைகளும், அனைத்து கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களையும், கூட்டாகவும் தனித்தனியாகவும் பிணைக்கும்.

11. கணக்குகளை ஒரு குழுவாக இணைத்தல்

வங்கியின் உள்ளக கொள்கைகளின்படி, எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் ஒரு தனி அடையாள எண் மூலம் ஒரு தனிநபர் / நிறுவனத்தை அடையாளம் காண சிறந்த முயற்சி எடுக்கிறது. வங்கியில் உள்ள வாடிக்கையாளரின் அனைத்து கணக்குகளும் இணைக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்கள் கவனிக்க வேண்டும். கட்டணம் வசூலிக்கப்பட்டால், முதன்மைக் கணக்கில் போதுமான இருப்புத்தொகை இல்லை என்றால், தொடர்புடைய கட்டணங்கள் வாடிக்கையாளரின் மற்ற இணைக்கப்பட்ட கணக்குகளிலிருந்து மீட்டெடுக்கப்படும்.

அந்தக் கணக்கிற்கு கெடு கடந்த தொகைகள் எதுவும் இல்லை என்பதை உறுதிசெய்த பிறகு, எந்தவொரு கணக்கையும் மூடுவதற்கு வாடிக்கையாளருக்கு உரிமை இருக்கும். கணக்குகள் ஒவ்வொன்றும் தேவையான இருப்புத்தொகைகள், கட்டணங்கள் போன்றவற்றை பராமரிப்பது குறித்த அவற்றின் சொந்த தேவைகளால் நிர்வகிக்கப்படும்.

12. பாஸ்புக் & கணக்குக்கான ஸ்டேட்மெண்ட் மின்னஞ்சல் மற்றும் ஆவண வடிவ ஸ்டேட்மெண்ட்கள் இரண்டிற்கும் வங்கி வழிவகை செய்துள்ளது. வாடிக்கையாளரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் ID-க்கு மின்னஞ்சல் ஸ்டேட்மெண்ட்கள் அனுப்பப்படும் அதே வேளையில், வங்கி பதிவின்படி ஆவண வடிவ ஸ்டேட்மெண்ட்கள் வாடிக்கையாளரின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். பாஸ்புக் பலனைப் பெறுவதற்கான விருப்பத்தையும் வங்கி வழங்குகிறது. பாஸ்புக் வசதி / கணக்குகளின் மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டுக்காக வங்கி தனது கணக்கு வைத்திருப்பவர்களிடம் கட்டணம் வசூலிப்பதில்லை.

எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் கிளைக்குச் சென்று பாஸ்புக்கை அடிக்கடி புதுப்பிக்க வேண்டியது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட பாஸ்புக் புதுப்பிக்கப்படாவிட்டால் அதற்கு வங்கி பொறுப்பேற்காது.

மின்னஞ்சல் ஸ்டேட்மெண்ட் களுக்கு, பெறப்பட்ட

TRUE COPY

# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்



மின்னஞ்சல்களின் நம்பகத்தன்மையை உறுதிசெய்ய வேண்டியது வாடிக்கையாளர்களின் பொறுப்பாகும், மேலும் வாடிக்கையாளர் பெறும் மோசடி மின்னஞ்சல்களால் ஏற்படும் பிரச்சனைகள் / இழப்புகளுக்கு வங்கி பொறுப்பேற்காது. மின்னஞ்சல் ஸ்டேட்மெண்ட்கள் வாடிக்கையாளர் அவ்வப்போது குறிப்பிடும் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கு மட்டுமே அனுப்பப்படும்.

உரிய நேரத்தில் ஸ்டேட்மெண்ட் (மின்னஞ்சல் / ஆவண வடிவ) பெறப்படவில்லை என்றால் வாடிக்கையாளர் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். வங்கி, அதன் விருப்பத்தின் பேரில், கட்டணமின்றி நகல் ஸ்டேட்மெண்ட்டை வழங்கலாம்.
ஏதேனும் முரண்பாடு/பிழை இருந்தால் வாடிக்கையாளர்கள் ஸ்டேட்மெண்ட்டை அனுப்பிய அல்லது பாஸ்புக்கில் உள்ளீடுகளை செய்து 14 நாட்களுக்குள் திருப்பி அனுப்ப வேண்டும். 14 நாட்கள் காலாவதியான பிறகு வாடிக்கையாளரால் வங்கிக்கு சுட்டிக்காட்டப்பட்ட / தெரிவிக்கப்பட்ட பிழைகள் / முரண்பாடுகள் காரணமாக வாடிக்கையாளருக்கு ஏற்படும் எந்த இழப்புக்கும் வங்கி பொறுப்பேற்காது. ஸ்டேட்மெண்ட்/பாஸ்புக்கில் ஏதேனும் பிழை / முரண்பாட்டை எந்த நேரத்திலும் சரி செய்யும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் கடைசியாக உருவாக்கப்பட்ட ஸ்டேட்மெண் அல்லது எந்தவொரு முந்தைய மாதத்திற்குமான ஸ்டேட்மெண்ட்களுக்கும் நகல் ஸ்டேட்மெண்ட்டை வழங்குமாறு கோரலாம். நகல் ஸ்டேட்மெண்ட்களை வழங்குவதற்கான கட்டணங்கள் கட்டண அட்டவணையின்படி இருக்கும்.

வாடிக்கையாளர் முகவரி மாற்றம் குறித்து உடனடியாக வங்கிக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் மற்றும் வங்கியின் KYC வழிகாட்டுதல்களின் கீழ், தேவையான ஆவணங்களை வழங்கிய பிறகு, பாஸ்புக்கில் உள்ள முகவரி மாற்றப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

13. சம்பளம் வழங்குமிடத்து வரி பிடித்தம்

வருமான வரிச் சட்டங்களின்படி, ஒரு வாடிக்கையாளருக்கு வங்கியில் உள்ள அனைத்து டெபாசிட்களிலும் செலுத்த வேண்டிய மொத்த வட்டி அல்லது மறு முதலீடு செய்யும் தொகையானது ஒரு நிதியாண்டில் இந்தியாவில் வசிக்கும் 60 வயதுக்குட்பட்டவர்களுக்கு ரூ. 40,000/- க்கு அதிகமாகவும், மற்றும் மூத்த குடிமக்களுக்கு 50,000/- க்கு அதிகமாகவும் இருக்கும் போது TDS கழிக்கப்படும். மேலும், பொருந்தினால், நிதியாண்டின் இறுதியில் இயல்பாகச் சேரும் வட்டிக்கு TDS கழிக்கப்படும்.

எந்த ஒரு TDS விலக்களிப்பை கோருவதற்கும் PAN எண்ணை RBI கட்டாயமாக்கியுள்ளது. PAN விவரங்களை வழங்காத பல வாடிக்கையாளர்களின் 15G / 15H படிவத்தை (பொருந்தும் வகையில்) வங்கி ஏற்காது.

சரியான நேரத்தில் 15G / 15H படிவத்தை வழங்குவது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன் கழிக்கப்பட்ட TDS-ஐ திரும்பப் பெறுவதற்கான வாடிக்கையாளரிடமிருந்து எந்தவொரு கோரிக்கையையும் வங்கி ஏற்காது.

குடியுரிமை பெற்ற இந்தியர்களாக இருக்கும் தகுதியுள்ள வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே TDS விலக்களிப்பு கிடைக்கும். 15H படிவத்தை மூத்த குடிமக்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும். மொத்த வட்டித் தொகையானது நிதியாண்டில் வருமான வரிக்கு விதிக்கப்படாத அதிகபட்சத் தொகையைத் தாண்டாத/தாண்டும் சாத்தியமில்லாத தனிநபர்கள், HUF மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவற்றிலிருந்து மட்டுமே படிவம் 15G ஏற்றுக்கொள்ளப்படலாம். படிவத்தில் ஏதேனும் விடுபடல்கள் / பிழைகள் அல்லது வாடிக்கையாளர் தரப்பில் தாமதங்கள் ஏற்பட்டால், TDS விலக்களிப்பை விண்ணப்பிப்பதில் ஏற்படும் தாமதம் / தோல்விக்கு வங்கி பொறுப்பாகாது.

வருமான வரிச் சட்டத்தின் 194A பிரிவின் கீழ் சேமிப்புக் கணக்கில் ஈட்டப்பட்ட வட்டிக்கு TDS விலக்களிப்பு வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆங்கில வருட காலாண்டின் முடிவிற்குப் பிறகும், ஃபிக்ஸட் டெபாசிட்களுக்கு பெறப்படும் வட்டிக்கு, நிர்ணயிக்கப்பட்ட வடிவத்தில் வங்கி TDS சான்றிதழை வழங்குவதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

14. செயல்பாட்டில் உள்ள கணக்குகள்

கணக்கு இயக்க விதிகள் கணக்கில் வரையறுக்கப்பட்டுள்ள செயல்பாட்டு ஆணையைப் பொறுத்தது (இது AOF-இல் செயல்படும் ஆணை அல்லது கணக்கைத் தொடங்கிய பிறகு வாடிக்கையாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் மாற்றங்கள் குறித்த வாடிக்கையாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் வரையறுக்கப்படும்)

ஒரு தனிநபரின் பெயரில் உள்ள கணக்குகள் அந்தத் தனிநபரால் மட்டுமே அல்லது அத்தகைய தனிநபரின் POA (பவர் ஆஃப் அட்டர்னி)-ஆல் மட்டுமே இயக்கப்படலாம்.

அனைத்துக் கணக்கு வைத்திருப்பவர்களாலும் வழங்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகளைப் பொறுத்து கூட்டுக் கணக்குகளை யாரேனும் ஒருவரால் தனியாகவோ அல்லது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் கூட்டாக இணைந்தோ அல்லது அனைத்துக் கணக்கு வைத்திருப்பவர்களாலும் இணைந்து இயக்க முடியும். செயல்பாட்டு வழிமுறையில் ஏதேனும் மாற்றம் இருந்தால், செயல்பாட்டு வழிமுறையைப் பொருட்படுத்தாமல் அனைத்து கணக்கு வைத்திருப்பவர்களின் அங்கீகாரமும் தேவைப்படும்.

10 வயதுக்கு மேற்பட்ட கல்வியறிவு பெற்ற மைனர் (வங்கியின் உள்ளக கொள்கையின்படி) வங்கிப் பரிவர்த்தனையின் தன்மையைப் புரிந்துகொண்டு, ஒரே மாதிரியாக கையொப்பமிடக் கூடியவராகவும், அந்தக் கணக்கு மைனரின் பெயரில் இருந்தால் மட்டுமே டெபாசிட் கணக்கை இயக்க அனுமதிக்க முடியும்.

இயற்கையான காப்பாளர் (அல்லது நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட காப்பாளர்) ஒரு மைனர் சார்பாக ஒரு டெபாசிட் கணக்கைத் தொடங்கி இயக்கலாம். இந்த நிலையில், கணக்கின் பாணியானது "மாஸ்டர் ABC (மைனர்) பை ஃபாதர் அண்டு நேச்சுரல் கார்டியன் XYZ" ஆக இருக்க வேண்டும்.

வாடிக்கையாளர்கள் தனது பெயரிலேயே எடுக்கப்பட்ட காசோலைகளைப் பயன்படுத்தியோ அல்லது ATM / டெபிட் கம் ATM கார்டைப் பயன்படுத்தி ATM மூலமாகவோ அல்லது லூஸ் லீஃப் காசோலைகளைப் பயன்படுத்தியோ பணம் எடுக்கலாம். பார்வைக் குறைபாடுள்ள வாடிக்கையாளர்கள் பணம் எடுப்பதற்கு காசோலையைப் பயன்படுத்தலாம் அல்லது ATM-இல் இருந்து பணம் எடுக்க ATM கார்டைப் பயன்படுத்தலாம்.

வங்கி கிளைகளுக்கு சென்று பணம் எடுத்தல் போன்ற சந்தர்ப்பங்களில், பார்வைக் குறைபாடுள்ள வாடிக்கையாளர், தேவையான வங்கி அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட முழுமையாக நிரப்பப்பட்ட காசோலையுடன் தேவையான புகைப்பட ID-ஐ கிளை "டெல்லரிடம்" வழங்க வேண்டும். டெபிட் கார்டு அல்லது காசோலைப் புத்தகத்தைத் தேர்வு செய்யாத எழுத படிக்க தெரியாத வாடிக்கையாளர்கள், வங்கிக் கிளை அதிகாரியின் சரிபார்ப்பு மற்றும் அங்கீகாரத்திற்கு பின் லூஸ் லீஃப் காசோலைகள் மற்றும் புகைப்பட ID நகல், ஆகியவற்றைப் பயன்படுத்தி மட்டுமே கிளைகளிலிருந்து பணத்தை எடுக்க முடியும்.

முழுமையான தொகையில் மட்டுமே பணம் எடுக்க முடியும். ரூ.50/-க்கு மேற்பட்ட தொகைக்காக மட்டுமே தனிப்பயனாக்கப்பட்ட காசோலை மூலம் பணம் எடுக்க வங்கி அனுமதிக்கும். ஒரு காசோலை மூலம் பெறக்கூடிய தொகைக்கு உச்ச வரம்பு எதுவும் இல்லை. ஆனால் அத்தகைய பணம் எடுத்தல் கிளை அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

சிறந்த சேவையை அளிக்கும் நோக்கத்தில், பெரிய தொகையை (10 லட்ச ரூபாய்க்கு மேல்) எடுப்பதற்கு, வாடிக்கையாளர்கள் முன்கூட்டியே வங்கியிடம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ATM-இல் பணம் எடுத்தல், காசோலைகளின் பயன்பாடு, DD/PO, மின்னணு பேமெண்ட் (RTGS / NEFT) ஆகியவற்றின் அடிப்படையில் குறைந்த எண்ணிக்கையிலான இலவச பரிவர்த்தனைகளுக்கு வாடிக்கையாளர் தகுதி பெறுவார். வாடிக்கையாளர் தகுதி பெறும் இலவச பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை குறித்த தகவலை அவர் வங்கியின் இணையதளத்தில் இருந்தோ அல்லது ஏதேனும் செல்லுபடியாகும் தொடர்பாடல் வழியாக வங்கியைத் தொடர்புகொள்வதன் மூலமாகவோ உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

50,000/- மற்றும் அதற்கு மேற்பட்ட ரொக்கப்பண டெபாசிட் பரிவர்த்தனைகளுக்கு PAN விவரங்கள் (வாடிக்கையாளரிடம் செல்லுபடியாகும் PAN இல்லாத சந்தர்ப்பங்களில் படிவம் 60/61) வழங்குவதை இந்திய அரசு கட்டாயமாக்கியுள்ளது.

கடன்பொறுப்பு திட்ட வகையின் அடிப்படையில், எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் கூடுதல் கட்டணமின்றி பணம் செலுத்தக்கூடிய (PAP) காசோலை வசதியை வழங்குகிறது. இந்த காசோலைகள் மூலம், வாடிக்கையாளர்கள் அனைத்து இடங்களிலும் காசோலையைப் பயன்படுத்தலாம், வாடிக்கையாளர்கள் எப்போதும் எழுத்துப்பூர்வமாக அளிக்க வேண்டும் மற்றும் அனைத்து கணக்கு வைத்திருப்பவர்களும் பரிமாற்ற கோரிக்கை கடிதத்தில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

15. காசோலை புத்தகங்கள் & பரிவர்த்தனைகள்

வங்கியானது பல நகரங்களில் தனிப்பயனாக்கப்பட்ட காசோலைப் புத்தகத்தை அதன் தகுதியுள்ள கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வழங்குகிறது (எழுத படிக்க தெரியாத கணக்கு வைத்திருப்பவர்கள், தேவையற்ற கூடுதல் விதிகள் அல்லது விவரங்கள் இல்லாத அல்லது காசோலை வசதி இல்லாத கணக்குகளுக்கு காசோலை புத்தக வசதி வழங்கப்படுவதில்லை).

வாடிக்கையாளரின் கணக்கு வகையைப் பொறுத்து குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இலவச காசோலை புத்தகத்தை பெறுவார்கள். வாடிக்கையாளர் கணக்கின் வகைக்கு வரையறுக்கப்பட்ட தேவையான குறைந்தபட்ச இருப்புத் தொகையை பராமரிக்கத் தவறினால், அத்தகைய வசதியை வங்கி கட்டுப்படுத்தலாம்.

ஏற்கனவே உள்ள காசோலை புத்தகங்கள் தீர்ந்தவுடன், வாடிக்கையாளர் புதிய காசோலை புத்தகத்திற்காக வங்கியிடம் கோரலாம். கணக்கின் வகைக்கு ஏற்ப வாடிக்கையாளர்களுக்கு குறைந்த எண்ணிக்கையிலான இலவச காசோலை புத்தகங்களுக்கு உரிமை உண்டு மற்றும் இலவச வரம்பிற்கு அப்பால் காசோலை புத்தகங்களை வழங்கினால் கட்டணம் வசூலிக்கப்படலாம்.

வங்கிக்கு வழங்கப்படும் அனைத்து காசோலைகளிலும் (வாடிக்கையாளர் கணக்கிலிருந்து) பின்வருபவை இருக்க வேண்டும்:

- அந்தக் கணக்கிற்கான செயல்பாட்டு வழிமுறையின்படி ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளது
- குறிப்பிட்ட கணக்கிற்கான வங்கி பதிவேட்டில் உள்ள கையொப்பத்தின்படி காசோலையில் உள்ள கையொப்பம் பொருந்துதல்
- அனைத்து புலங்களும் (பணம் பெறுபவர், தொகை எண்ணெழுத்துக்களில், தொகை வார்த்தைகளில், தேதி) நிரப்பப்பட்டுள்ளன
- காசோலை காலாவதியாகி இருக்கக்கூடாது (வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு மேல் அல்லாத தேதியாக இருக்கவேண்டும்)
- எந்த ஒரு திருத்தமும் பணம் எடுப்பவர் கையொப்பத்தால் மறு கையொப்பமிடப்பட்டுள்ளது (திருத்தப்பட்ட RBI வழிகாட்டுதல்களின்படி, காசோலை இடைநிறுத்துதல் அமைப்பின் கீழ் செயலாக்கப்பட்ட காசோலைகளில் எந்த திருத்தமும் அனுமதிக்கப்படாது). திருத்தங்கள் சந்தேகத்திற்கிடமானவை என கண்டறியப்பட்டால், வங்கி காசோலைகளை ஏற்காமல் போகலாம்.
- காசோலை ஏற்கப்படுவதற்கு கணக்கில் போதுமான நிதி இருக்கவேண்டும் - நிதி பற்றாக்குறையால் காசோலை ஏற்கப்படாமல் இருப்பதை தவிர்க்க, கணக்கில் போதுமான நிதி இருப்பதை வாடிக்கையாளர் உறுதி செய்ய வேண்டும்

போதிய நிதி இல்லாத காரணத்தால் ஏதேனும் காசோலை

NOTARY PUBLIC
K.S. VIJAYAKUMAR
CHENNAI, TAMILNADU
REGN. No. 14572
DATE OF EXPIRY
18-09-2029
GOVERNMENT OF INDIA
TRUE COPY
SUPPORT LANGUAGE SERVICES PVT. LTD.
CHENNAI

நிராகரிக்கப்பட்டால் வங்கியிடமிருந்து அபராதக் கட்டணங்கள் விதிக்கப்படலாம்.

- காசோலை இடைநிறுத்துதல் அமைப்பின் மூலம் காசோலைகளைச் செயலாக்குவதற்குக் குறிப்பிடப்பட்ட அனைத்துத் தேவைகளும் பொருந்தும் என்பதையும் வாடிக்கையாளர்கள் அந்தக் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதையும் வாடிக்கையாளர்கள் கவனிக்க வேண்டும். பல்வேறு இடங்களில் காசோலை இடைநிறுத்துதல் அமைப்பினை படிப்படியாக RBI நடைமுறைப்படுத்துகிறது.

போதுமான பணம் இல்லாததால், வாடிக்கையாளர் வழங்கிய காசோலை திருப்பியனுப்பப்பட்டால், வங்கியானது வாடிக்கையாளருக்கு கட்டணம் விதிக்கலாம். காசோலை திருப்பியனுப்படும் நிகழ்வுகள் அதிகளவு ஏற்படுமெனில், வாடிக்கையாளர் கணக்கை முடக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

காணாமல் போன / திருடப்பட்ட / கட்டணம் செலுத்தத் தேவையில்லாத காசோலைகளுக்கு வாடிக்கையாளர்கள் வங்கியில் 'பேமெண்ட் நிறுத்தம்' கோரிக்கையை மேற்கொள்ளலாம். காசோலையை வங்கியில் சமர்ப்பிப்பதற்கு முன், அத்தகைய கட்டண நிறுத்தக் கோரிக்கையை வாடிக்கையாளர் உறுதி செய்ய வேண்டும். காசோலையை வங்கியில் சமர்ப்பித்த பிறகு, கட்டண நிறுத்தக் கோரிக்கையைப் பெற்ற காசோலைகளுக்கு செய்யப்படும் எந்தவொரு கட்டணத்திற்கும் வங்கி பொறுப்பேற்காது. அத்தகைய கட்டண நிறுத்தக் கோரிக்கைக்காக வங்கியானது வாடிக்கையாளரிடம் இருந்து கட்டணம் வசூலிக்கலாம் (கட்டண அட்டவணையைப் பார்க்கவும்). கடன்பொறுப்பு திட்ட வகையின் அடிப்படையில், எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் கூடுதல் கட்டணமின்றி பணம் செலுத்தக்கூடிய (PAP) காசோலை வசதியை வழங்குகிறது. இந்த காசோலைகள் மூலம், வாடிக்கையாளர்கள் எக்விடாஸ்-இன் அனைத்து கிளைகளிலும் காசோலையைப் பயன்படுத்தலாம் மற்றும் எக்விடாஸ் கிளையின் எந்த இடத்திலும் உள்ளூர் பணம் வழங்கல் முறையாகக் கருதப்படும்.

எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்கின் வாடிக்கையாளர்கள் தங்கள் காசோலைகளை வங்கியில் சமர்ப்பிக்க கிளையில் நேரடியாக அளித்தல், கிளையில் டிராப் பாக்ஸ், ATM-இல் உள்ள டிராப் பாக்ஸ்களை பயன்படுத்துதல் போன்ற பல்வேறு விருப்பத்தேர்வுகள் உள்ளன. கிளைகளில் மட்டுமே வாடிக்கையாளர்கள் காசோலையை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகையைப் பெறலாம் மற்றும் டிராப் பாக்ஸ்களில் போடப்படும் எந்தவொரு காசோலையும் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்கு உட்பட்டதாகும். டிராப் பாக்ஸ்களில் போடப்பட்ட காசோலைகளுக்கான கிளியரிங் சுழற்சிகள் அந்தந்த டிராப் பாக்ஸ்களில் குறிக்கப்படும் மற்றும் வாடிக்கையாளர்கள் அதற்குரிய கால நேரத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்.

16. டிமாண்ட் டிராஃப்ட் & பே-ஆர்டர்கள்

எக்விடாஸ் கிளைகளில் ஏதேனும் ஒன்றிற்கு வருகை தருவதன் மூலம் வாடிக்கையாளர்கள் டிமாண்ட் டிராஃப்ட்/பே ஆர்டர்களை வழங்குவதற்கான கோரிக்கையை மேற்கொள்ளலாம். டிமாண்ட் டிராஃப்ட்ஸ் அல்லது பே ஆர்டர்களை வழங்குவதோடு தொடர்புடைய ஏதேனும் கட்டணங்கள் (கட்டண அட்டவணையைப் பார்க்கவும்) வாடிக்கையாளரின் கணக்கில் டெபிட் செய்வதன் மூலம் வாடிக்கையாளரிடமிருந்து வசூலிக்கப்படும். வாடிக்கையாளர் வங்கியுடன் பராமரிக்கும் கணக்கு வகை மற்றும் உறவுமுறையைப் பொறுத்து கட்டண விதிப்புகள் பொருந்தும்.

ஏதேனும் ஆவணம் தொலைந்துவிட்டாலோ மற்றும் (அல்லது) ரத்து செய்யப்பட வேண்டியிருந்தாலோ, டிமாண்ட் டிராஃப்ட் அல்லது பே ஆர்டர் வழங்கப்பட்ட அதே எக்விடாஸ் கிளைக்கு வாடிக்கையாளர் செல்ல வேண்டும். அந்தத் தொகை, பொருந்தக்கூடிய கட்டணங்கள் கழித்த பிறகு, வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

ஒரு டிராஃப்ட் தொலைந்து போனால், வாடிக்கையாளர் தொலைந்த டிராஃப்ட்டை ரத்து செய்ய விரும்பினால், வாடிக்கையாளர் சாத்தியமான அனைத்து கடன்பொறுப்புகளுக்கும் வங்கிக்கு இழப்பீடு வழங்க வேண்டும். இந்த நிலையில், வங்கியின் திருப்திக்கு சில ஆவணங்களை வாடிக்கையாளர் பூர்த்தி செய்ய வேண்டும். அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்ட பின்னரே, டிராஃப்ட் ரத்துசெய்யப்பட்டு நிதியானது வாடிக்கையாளருக்கு பரிமாற்றப்படும். தொலைந்த டிராஃப்ட் ஏற்கனவே கிளியரிங் செய்யப்பட்டிருந்தால் அல்லது கிளியரிங் சுழற்சியில் இருந்தால், இதை ரத்து செய்ய முடியாது.

எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் பல்வேறு வங்கிகளுடனும் (தொடர்புடைய வங்கிகள்) மற்றும் எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்கின் கிளைகள் இல்லாத இடங்களில் டிமாண்ட் டிராஃப்ட்களை வழங்குவதற்காக உள்ளூரில் மற்ற வங்கிகளுடன் கூட்டாக செயல்படுகிறது
எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் இன்டர்நெட் பேங்கிங் மூலம் DD & PO-களை வழங்குகின்றது. அத்தகைய சேவை, அதனுடன் தொடர்புடைய கட்டணங்கள் மற்றும் விநியோக வழிமுறை பற்றிய விவரங்கள் சேவையை வழங்குவதற்கு முன் தெரிவிக்கப்படும்.

எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க்-ஆனது, வாடிக்கையாளர்களுக்கு முன்னறிவிப்பின்றி, பல்வேறு சேவைகளை வழங்குவதற்கும், எந்தவொரு சேவையையும் எந்த வழிமுறை மூலமாகவும் இடைநிறுத்துவதற்கான உரிமையை கொண்டுள்ளது. டிராஃப்ட்-க்கான கோரிக்கையில் வழங்கப்பட்ட தவறான தகவல்களுக்கு வாடிக்கையாளரே இறுதிப் பொறுப்பை ஏற்பார். டிராஃப்ட்டைப் பெற்றவுடன் டிராஃப்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை என்பதை வாடிக்கையாளர் உறுதிசெய்ய வேண்டும்.

17. கணக்கை இயக்குவதற்கான நிலையான வழிமுறைகள்

எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் தனது வாடிக்கையாளர்களுக்கு நிதி பரிமாற்ற வழிமுறைகளை கடன்பொறுப்புக் கணக்கிற்கு வரையறுக்கப்பட்ட காலம், தொகை அல்லது கணக்கை இயக்குவதற்கான நிலையான வழிமுறைகள் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஏதேனும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபந்தனைகளுக்கு அமைக்கும் வசதியை வழங்குகிறது. இந்தச் சேவையைப் பெறுவதற்கு வாடிக்கையாளர் எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் கிளைகளில் ஏதேனும் ஒன்றில் கோரிக்கையை வழங்க வேண்டும்.

கடன்களை வழங்குவதற்கான நிலையான வழிமுறைகள் ஏற்கப்படாவிட்டால், இது காசோலை ரிட்டர்னுக்கு சமமாக கருதப்படுகிறது மற்றும் வாடிக்கையாளர் அந்தந்த திட்டங்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தேவையான கட்டணங்களையும் ஏற்க வேண்டும்.

நிலையான அறிவுறுத்தல்களை தொடர்ச்சியாக/அடிக்கடி ஏற்காத சந்தர்ப்பங்களில், முன் அறிவிப்பின்றி மேற்படி வாடிக்கையாளருக்கு இந்த வசதியை நிறுத்துவதற்கான உரிமையை எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் கொண்டுள்ளது.

சர்வதேச நிதி பரிமாற்றத்திற்கான நிலையான வழிமுறைகள் தற்போது கிடைக்கவில்லை என்பதை வாடிக்கையாளர்கள் கவனிக்க வேண்டும்.

18. மொபைல் விழிப்பூட்டல்கள்

வங்கியுடன் மொபைல் எண்களை பதிவு செய்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களும் பல்வேறு வகையான வங்கிப் பரிவர்த்தனைகளுக்கு மொபைல் விழிப்பூட்டல்களைப் பெற உரிமை உண்டு.

இந்த விழிப்பூட்டல்கள் பொதுவாக பணம் எடுத்தல்,ரொக்கப்பண டெபாசிட், நிதி பரிமாற்றம், ஃபண்ட்ஸ் கிரெடிட், இருப்புத்தொகை விழிப்பூட்டல்கள் போன்றவற்றுக்கு வழங்கப்படுகின்றன. வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு அடிக்கடி (அல்லது நிதிசார் பரிவர்த்தனை நிகழ்வின் அடிப்படையில்) விழிப்பூட்டல்களை (புஷ்) அனுப்பும் என்றாலும், வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட தகவலுக்காக (புல்) கோரலாம்.

பரிவர்த்தனை நிகழ்விற்குப் பிறகு வாடிக்கையாளருக்கு உடனடியாகத் தெரிவிக்கப்படுவதை உறுதிசெய்ய சிறந்த முயற்சியின் அடிப்படையில் வங்கி இந்த விழிப்பூட்டல்களை அனுப்புகிறது, இருப்பினும், முழுமையான தகவல் பரிமாற்றத்தை நிறைவுசெய்ய வங்கி பல்வேறு மூன்றாம் தரப்பு சேவைகளை சார்ந்துள்ளது. இது சம்பந்தமாக, வாடிக்கையாளருக்கு தாமதமாக சென்றடைந்த/ பெறப்படாத தகவல்களுக்கு வங்கி பொறுப்பேற்காது.

இந்த மொபைல் விழிப்பூட்டல்களுக்கான கட்டணங்கள் திட்ட அம்சங்கள், வங்கியுடனான வாடிக்கையாளரின் உறவு, மற்றும் கட்டண அட்டவணையில் குறிப்பிடப்பட்டபடியும் இருக்கும். கட்டணங்கள் அவ்வப்போது மாற்றத்திற்கு உட்பட்டவை.

19. கணக்கில் உள்ள பணத்திற்கு மேல் அதிகமாக எடுப்பது (ஓவர் டிராயிங்)

குறிப்பாக ATM-இல் இருந்து பணம் எடுப்பதற்கு முன், டெபிட் கார்டு / சிப் டெபிட் கார்டு மூலம் வணிகர் POS அல்லது நெட் பேங்கிங் அல்லது கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் பரிவர்த்தனை முறை, காசோலை வழங்குதல் அல்லது டிமாண்ட் டிராஃப்டைக் கோருதல் போன்றவை மூலமாக எந்தப் பரிவர்த்தனையையும் மேற்கொள்வதற்கு முன்பு வங்கியில் உள்ள தனது கணக்கில் எப்போதும் போதுமான இருப்புத்தொகை இருப்பதை உறுதி செய்வது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு பரிவர்த்தனையும் போதுமான இருப்புத்தொகை இல்லாததால் வங்கியால் ஏற்கப்படவில்லையெனில் அதற்கு வங்கி பொறுப்பேற்காது. அத்தகைய பரிவர்த்தனையை நிறைவேற்றுவது, வாடிக்கையாளர் கணக்கில் டெபிட் இருப்புத்தொகைக்கு வழிவகுத்தால், கணக்கு விதித அடிப்படையில் டெபிட் இருப்புத்தொகையில் இருக்கும் காலத்திற்கான 'டெபிட் இருப்பு நிலை' தொகைக்கு பொருந்தக்கூடிய வட்டியை வங்கியானது வசூலிக்கும் உரிமையை கொண்டிருக்கும். நடைமுறையில் உள்ள வங்கியின் விதிதங்களின்படி, முன் ஏற்பாட்டின் கீழ் இல்லாவிட்டாலும், வாடிக்கையாளர் தனது கணக்கில் உருவாக்கப்பட்ட மிகைப்பணமெடுத்தலுக்கு வட்டி செலுத்த வேண்டியிருக்கும். வாடிக்கையாளருக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ வாடிக்கையாளர் வைத்திருக்கும் பிற கணக்குகளில் கிடைக்கும் எந்தவொரு கிரெடிட்டிற்கும் எதிராக வங்கி தனது சொந்த விருப்பத்தின் பேரில் அத்தகைய டெபிட் இருப்புத்தொகையை ஒதுக்கலாம்.

வாடிக்கையாளரின் கணக்கில் 'ஓவர் டிராயிங்' தொடர்பாக வங்கியால் வழங்கப்படும் எந்தவொரு தற்காலிக நிவாரணமும் முற்றிலும் வங்கியின் விருப்பத்திற்கு உட்பட்டது மற்றும் எதிர்காலத்தில், வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே எழுத்துப்பூர்வமாக ஒப்புக் கொள்ளப்பட்டால் தவிர ஒரு முறை வசதியாக மட்டுமே பொருந்தும் மற்றும் இது போன்ற பரிவர்த்தனைகளுக்கான ஒப்புதலாக கருதப்படக்கூடாது.

20. கலெக்ஷன் வசதி

வாடிக்கையாளர் பெயரில் எடுக்கப்பட்ட காசோலைகளை வங்கி கலெக்ஷனுக்காக ஏற்றுக்கொள்கிறது. வங்கியின் காசோலை கலெக்ஷன் கொள்கையானது அதன் கிளையில் கிடைக்கப்பெறும் 'காசோலைகள் / ஆவணங்களின் கலெக்ஷன் கொள்கை'யால் நிர்வகிக்கப்படுகிறது. உள்ளூர் காசோலைகள் மற்றும் வெளியூர் காசோலைகளை ஏற்றுக்கொள்வதற்கான வங்கியின் கட்-ஆஃப் நேரம் வங்கி கிளைகளின் அறிவிப்பு பலகையிலும் டிராப் பாக்ஸிலும் டிஸ்ப்ளே செய்யப்பட்டிருப்பதை வாடிக்கையாளர் கவனிக்க வேண்டும்.

தபால்/கூரியர் போக்குவரத்தின் போது காசோலை தொலைந்து போவது / சிதைவது / தாமதம் ஆவதால் வாடிக்கையாளருக்கு ஏற்படும் சேதம் / இழப்புக்கு வங்கியானது எந்தப் பொறுப்பையும் ஏற்காது. காசோலையில் உள்ள கையொப்பங்களின் நம்பகத்தன்மையை உறுதிசெய்ய அல்லது ஆவணத்தை செயல்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நேரம் குறித்து வங்கிக்கு எந்த கடன்பொறுப்பும் இல்லை. கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டது

21. வீட்டில் இருந்தபடியே பேங்கிங் செய்தல்

எக்விடாஸ் தனது வங்கிச் சேவைகளை வாடிக்கையாளர் "வீட்டில் இருந்தபடியே" பேங்கிங் செய்வதற்கு வங்கியால் நியமிக்கப்பட்ட சுயாதீன ஏஜென்சிகள் மூலமாக விரிவுபடுத்தியுள்ளது. வாடிக்கையாளரின் பதிவு செய்யப்பட்ட முகவரியில் (வங்கி பதிவுகளின்படி) கணக்கை வைத்திருப்பவர்கள் / ஆணை வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே

TRUE COPY

# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

equitas
Equitas Small Finance Bank

இந்த வசதி வழங்கப்படுகிறது மற்றும் நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் நகர எல்லைக்குள் மட்டுமே கிடைக்கும். ஒரு இருப்பிடத்தின் வரம்புகள் மற்றும் வீட்டு வங்கிச் சேவையின் இருப்பிடம் ஆகியவை வங்கியின் முழு உரிமை மற்றும் தகுதியான ஏஜென்சிகளின் சாத்தியம் மற்றும் கிடைக்கும் தன்மை உள்ளிட்ட பல காரணிகளின் அடிப்படையிலானது.

வாடிக்கையாளர்கள் பின்வரும் வீட்டு வங்கிச் சேவைகளைப் பெறலாம்.

- கேஷ் பிக்-அப்
- காசோலை பிக்-அப்
- கேஷ் டெலிவரி

மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு சேவைக்கான வரம்புகள் வங்கியின் இருப்பிடம் வாரியாக வரையறுக்கப்பட்டுள்ளன, மேலும் வாடிக்கையாளர் முன்-நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குக் கட்டுப்பட வேண்டும். கட்டண அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ளபடி சேவைகளுக்கான கட்டணங்கள் வாடிக்கையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன.

அனைத்து ஊழியர்களுக்கும் (பல்வேறு ஏஜென்சிகளின்) வீட்டு வங்கிச் சேவை செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக தனிப்பட்ட அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன, மேலும் பரிவர்த்தனையை மேற்கொள்வதற்கு முன் அடையாளத்தை உறுதிப்படுத்துவது வாடிக்கையாளரின் முழுப் பொறுப்பாகும். வாடிக்கையாளரின் கணக்கில் பரிவர்த்தனைகள் தோன்றும் வரை, ஒப்புகை நகல்களை வாடிக்கையாளர்கள் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால், வாடிக்கையாளர்கள் உடனடியாக அருகிலுள்ள கிளையைத் தொடர்புகொண்டு தெரிவிக்க வேண்டும்.

கேஷ் பிக்-அப் மற்றும் காசோலை பிக்-அப் போன்றவற்றுக்கான பரிவர்த்தனையை முடிக்க தேவைப்படும் நேரம் வரை வாடிக்கையாளர்கள் காத்திருக்கவேண்டும். இவை அனைத்தும் ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து தொகை டெபிட் செய்யப்பட்ட பிறகே வாடிக்கையாயாளருக்கு ரொக்கப்பணம் வழங்கப்படும் மற்றும் வங்கி கணக்கில் பணம் இல்லாத நிலை என்பது பரிவர்த்தனையை செயல்படுத்த முடியாது என்பதைக் குறிக்கிறது.

வாடிக்கையாளர் மற்றும் வங்கிக்கிடையே உள்ள விட்டிலேயே வழங்கப்படும் வங்கிச் சேவை ஒப்பந்தத்தை முறையாக செயல்படுத்திய பிறகே எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க்-ஆனது இந்தச் சேவைகளை வழங்குகிறது மற்றும் சேவைகள், காலக்கெடு மற்றும் பொறுப்புகள் குறித்த அனைத்து விவரங்களும் ஒப்பந்தத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆவணத்தை வாடிக்கையாளர்கள் கவனமாகப் படித்து செயல்படுத்த வேண்டும். பணம் வழங்காமை, போலி ரூபாய் நோட்டுகள் கண்டறிதல் போன்றவை உள்ளிட்ட ஆனால் அவை மட்டும் அல்லாமல் பிற வழிகளில் எழும் எந்த பிரச்சனைகளுக்கும் எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் பொறுப்பேற்காது.

22. TD-க்கு எதிரான கடன்

எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் தனது வாடிக்கையாளர்களுக்கு, தற்போதுள்ள கால வரம்புடைய டெபாசிட்களுக்கு எதிராக கடன் வசதியை வழங்குகிறது. அத்தகைய கடன்களுக்கான வட்டி விகிதங்கள் மற்றும் தொடர்புடைய பிற கட்டணங்கள் வங்கியின் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் மற்றும் அவை அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் TD மீதான கடன் வழங்குவதற்கான மார்ஜினை கருத்தில் கொள்கிறது. உறவுமுறை மற்றும் பிற காரணிகளின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கிடையே இந்த மார்ஜின் மாறுபடும். கடன் வழங்கல் ஒப்புதலுக்கு பிறகு, டெபாசிட் ஆனது கடனுக்கான பிணையத்தைக் குறிக்கும் வகையில், அடிப்படையான கால வரம்புடைய டெபாசிட்டுக்கு குறிக்கப்படும்.

டெபாசிட்களுக்கு எதிரான அத்தகைய கடன் வசதிகள் ஏற்கனவே இருக்கும் TD-ஐ அடமானமாக கருதும், மேலும் குறிப்பிட்ட குறைந்தபட்ச முதிர்வு காலத்தை முடிப்பதற்குள் அத்தகைய கால வரம்புடைய டெபாசிட் திரும்பப் பெறப்பட்டால், அத்தகைய முன்பணம் டெபாசிட்க்கு எதிரான கடனாக கருதப்படாது. TD-க்கு எதிரான கடன் மற்றும் பிற கடன்களுக்கான வட்டி விகிதங்கள் வேறுபடும் என்பதையும் வாடிக்கையாளர்கள் கவனிக்க வேண்டும்.

23. செயலில் இல்லாத கணக்கு

எக்விடாஸ் வங்கியானது ஒரு கணக்கை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

- செயலற்ற கணக்கு - 12 மாதங்களுக்கு தொடர்ந்து வாடிக்கையாளர் மேற்கொள்ளும் பரிவர்த்தனைகள் எதுவும் இல்லாத கணக்கு.
- செயலில் இல்லாத கணக்கு - 24 மாதங்களுக்கு தொடர்ந்து வாடிக்கையாளர் மேற்கொள்ளும் பரிவர்த்தனைகள் எதுவும் இல்லாத கணக்கு. அதாவது கணக்கு செயலற்ற நிலைக்கு வந்த பிறகு 12 மாதங்களுக்கு வாடிக்கையாளர் மேற்கொள்ளும் பரிவர்த்தனைகள் எதுவும் இல்லாத கணக்கு.

வாடிக்கையாளர் மேற்கொள்ளும் பரிவர்த்தனைகள் என்பது ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கில் மேற்கொள்ளும் ஏதேனும் கிரெடிட் அல்லது டெபிட் பரிவர்த்தனைகள் என்பதாகும், இதில் பின்வருபவை உள்ளடங்கும் ஆனால் அவை மட்டும் அல்லாதவையும் உள்ளடங்கும்:

- ரொக்கப்பணம் டெபாசிட் செய்தல் அல்லது பணம் எடுத்தல்
- ATM-இல் பணம் எடுத்தல்
- நெட் பேங்கிங்/மொபைல் பேங்கிங்/ :.போன் பேங்கிங் மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகள்
- காசோலைகள் அல்லது பிற ஆவணங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள்
- ECS கிரெடிட்கள் அல்லது டெபிட்கள்
- RTGS மற்றும் NEFT
- கணக்கை இயக்குவதற்கான நிலையான வழிமுறைகள்

ஒரு கணக்கானது செயலற்ற அல்லது செயலில் இல்லாததாக வகைப்படுத்தப்பட்டால், அத்தகைய கணக்கிற்கான கிரெடிட்கள் மற்றும் டெபிட்கள் தற்காலிகமாக மறுக்கப்படலாம். வாடிக்கையாளர் மற்றும் வாடிக்கையாளரின் (அனைத்து கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்கள், பொருந்தும்படி) விவரங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த, KYC தொடர்பான ஆவணங்களை எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் கிளைகளில் சமர்ப்பிக்க வேண்டும். விதிமுறைகளில் சமரசம் செய்யாமல், இந்தச் செயல்பாட்டின் போது வாடிக்கையாளர்கள் சிரமத்திற்கு உள்ளாகாமல் இருக்க தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் எடுக்கும்.

செயலில் இல்லாத காலத்தின் போது, பிற மாற்று வழிகளான ATM, :.போன் பேங்கிங், மொபைல் பேங்கிங், ஆன்லைன் பேங்கிங் போன்றவற்றின் மூலமாகவும் வாடிக்கையாளர் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியாது. இது தொடர்பான எழுத்துப்பூர்வ கோரிக்கையுடன் தேவையான அனைத்து KYC ஆவணங்களையும் வழங்கிய பிறகு மற்றும் பரிவர்த்தனையைத் தொடங்குவதன் மூலம் மட்டுமே கணக்கு செயல்படுத்தப்படும்.

24. நியமனம்

அனைத்து சேமிப்பு வங்கி கணக்குகளுக்கும் நியமன வசதி உள்ளது. வங்கி அலுவலகத்தில் பணிபுரிந்து வங்கி கணக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் எவரையும் நியமனம் செய்ய முடியாது.

ஒரு கணக்கைத் தொடங்கும் போது, குறிப்பாக தனிப்பட்ட தனிநபர் கணக்குகளுக்கு, நியமன விவரங்களை வழங்குமாறு வாடிக்கையாளர் அறிவுறுத்தப்படுகிறார். தனிப்பட்ட தனிநபர் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர் நியமன விவரங்களையும் வழங்க விரும்பாத நிலையில், அது பிரத்தியேகமாக AOF-இல் குறிப்பிடப்பட்டு வாடிக்கையாளரால் கையொப்பமிடப்பட வேண்டும். ஒரு நபர் சார்பில் மட்டுமே நியமனம் செய்ய முடியும். நியமனதாரர் 18 வயதிற்கு உட்பட்டவராக இருந்தால், நியமனதாரரின் நிறைவயது அடையாத காலத்தில் தொகையை கிளைம் செய்வதற்கு வேறொரு 18 வயதிற்கு மேற்பட்ட வயதுடைய தனிநபர் நியமிக்கப்படவேண்டும்.

மைனர் (18 வயதிற்கு உட்பட்ட) கணக்காக இருக்கும்பட்சத்தில், மைனர் சார்பாகச் செயல்பட சட்டப்பூர்வமாக உரிமையுள்ள நபரை நியமனம் செய்ய வேண்டும். மைனர்களால் இயக்கப்படும் மைனர் கணக்குகளுக்கு நியமன வசதி வழங்கப்படுவதில்லை.

வாடிக்கையாளர் தனது வாழ்நாளில் நியமனத்தைச் சேர்க்கலாம் அல்லது கணக்கில் இருக்கும் நியமன விவரங்களை மாற்றலாம் / திருத்தலாம். கூட்டுக் கணக்குகளாக இருந்தால், நியமன விவரங்களுக்கு மாற்றாக அனைத்து கணக்கு வைத்திருப்பவர்களிடமிருந்தும் அங்கீகார கடிதம் பெறுவது இன்றியமையாததாக இருக்கும். நியமனம் செய்யும்போது அல்லது நியமன விவரங்களை மாற்றும்போது/திருத்தும்போது ஒரு சாட்சி தேவைப்படும் மற்றும் நியமன படிவத்தில் சாட்சியின் கையொப்பம் கட்டாயமானதாக இருக்கும்.

புதிய நியமனம் அல்லது ஏற்கனவே உள்ள நியமனதாரர் விவரங்களில் மாற்றம்/திருத்தம் செய்தல் போன்ற அனைத்துப் பரிவர்த்தனைகளுக்கான ஒப்புகையைப் பெறுவதை வாடிக்கையாளர் உறுதிசெய்ய வேண்டும்.

தனிப்பட்ட தனிநபர் கணக்கு வைத்திருப்பவர் அல்லது கூட்டுக் கணக்கின் அனைத்து கணக்கு வைத்திருப்பவர்களும் இறந்தால் மட்டுமே வங்கியில் இருந்து பொருந்தக்கூடிய கட்டணத்தைப் பெற நியமனதாரருக்கு உரிமை உண்டு.

25. மரணம் அல்லது திறனின்மை

தனிநபர் கணக்கு வைத்திருப்பவர் இறந்துவிட்டாலோ அல்லது திறனற்றவர் என்று அறிவிக்கப்பட்டாலோ, கணக்கில் உள்ள தொகையானது பதிவுசெய்யப்பட்ட நியமனதாரருக்கு மட்டுமே செலவாக்கப்படும். ஒரு நியமனதாரர் நியமிக்கப்படாத பட்சத்தில், வங்கியானது அத்தகைய பிரச்சனையை படிப்படியாக ஆராய்ந்து மற்றும் கணக்கில் உள்ள தொகைகளை சட்டப்பூர்வ வாரிசு(கள்) அல்லது நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட நபரிடம் மட்டுமே ஒப்படைக்கவேண்டும்.

கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களில் எவரேனும் அல்லது கணக்கில் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர் இறந்துவிட்டால் அல்லது திறனற்றவர் என அறிவிக்கப்பட்டால் வாடிக்கையாளர் உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். எக்விடாஸ் அத்தகைய கணக்குகளை முடக்கலாம் மற்றும் பின்வருபவர்களின் அடையாளம் மற்றும் விவரங்கள் குறித்து வங்கி திருப்தி அடையும் வரை அனைத்து செயல்பாடுகளையும் நிறுத்தலாம்.

26. விதிமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள்

RBI / GOI-இடமிருந்து ஏதேனும் விதிகள் / ஒழுங்குமுறைகளில் மாற்றம், வசதி / திட்டத்தில் எதையேனும் வங்கி சேர்த்தல் அல்லது நீக்குதல் அல்லது ஏற்கனவே உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் திருத்துவதற்கு வங்கி பொருத்தமானதாகக் கருதும் வேறு ஏதேனும் காரணங்களால் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றத்திற்கு உட்பட்டவை.

வங்கியானது தனது சொந்த விருப்பத்தின் பேரில் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அவ்வப்போது மாற்றலாம். மாற்றங்களானவை புதிய விதிமுறைகள் & நிபந்தனைகளைச் சேர்ப்பது, ஏற்கனவே உள்ள விதிமுறைகள் & நிபந்தனைகளை நீக்குவது, ஏற்கனவே உள்ள விதிமுறைகள் & நிபந்தனைகளை மாற்றியமைத்தல் ஆகியவற்றுடன் ஆனால் அவை மட்டும் அல்லாது மற்றவையும் இருக்கலாம்.

வங்கி தனது இணையதளத்தில் ஹோஸ்ட் செய்வதன் மூலமாகவோ அல்லது கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் தொடர்பு முறை மூலமாகவோ மாற்றங்களைத் தெரிவிக்கலாம்.

TRUE COPY

# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

equitas
Equitas Small Finance Bank

வங்கிகளின் இணையதளங்களை தவறாமல் பார்ப்பதன் மூலம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து தகவல்களைத் தெரிந்து கொள்வது வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.

27. பரிமாற்றவியலா தன்மை

கணக்கு மற்றும் வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவைகள் எந்த சூழ்நிலையிலும் பரிமாற்ற முடியாதவை மற்றும் வாடிக்கையாளர் மட்டுமே பயன்படுத்த வேண்டும். வங்கி அதன் உரிமைகளை மாற்ற, நியமிக்க அல்லது விற்கும் உரிமையை கொண்டுள்ளது; வேறு எந்த நபருக்கான பலன்கள் அல்லது கடமைபொறுப்புகள் மற்றும் இந்த விதிமுறைகள் & நிபந்தனைகள் வங்கியின் பின்வருபவர்கள் மற்றும் ஒதுக்கப்பட்டவர்களின் நலனுக்காக தொடரும்.

28. அறிவிப்புகள்

கணக்கு, சேவைகள் மற்றும் கணக்கு குறித்த வசதிகள் தொடர்பான அறிவிப்புகள் ஆகியவற்றை எக்விடாஸ் ஆனது வாடிக்கையாளர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளில் மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது வாடிக்கையாளர்களின் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் முகவரிக்கு ஒரு கடிதத்தை அனுப்புவதன் மூலமாகவோ வழங்கலாம். எக்விடாஸ் இணையதளத்தில் அறிவிப்பை வெளியிடுவதன் மூலமாகவோ அல்லது கிளைகளில் டிஸ்ப்ளே செய்வதன் மூலமாகவோ ஏதேனும் அறிவிப்பை வழங்கலாம், மற்றும் அது வாடிக்கையாளரால் பெறப்பட்டதாகக் கருதப்படும்.

29. தள்ளுபடி

எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க்-ஆனது, கிளையில் டிஸ்ப்ளே, வங்கி இணையதளம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அஞ்சல் வழி தபால்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்ட கட்டணங்களின் அட்டவணையின்படி மட்டுமே கணக்கிற்கான கட்டணங்களை விதிக்கிறது. இந்த கட்டணங்களை எந்த சூழ்நிலையிலும் தள்ளுபடி செய்ய முடியாது. எந்தவொரு தள்ளுபடியும் வங்கியின் முற்றிலுமான உரிமையாகும். மேலும் தொழில்நுட்ப காரணங்களால் ஏதேனும் முரண்பாடு/ கணக்கில் தவறான டெபிட்டுகள் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே பொருந்தும். திருத்தம் செய்வதற்காக குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அத்தகைய முரண்பாடுகளை வாடிக்கையாளர்கள் வங்கிக்கு தெரிவிக்க வேண்டும். வாடிக்கையாளர்கள் தொடர்பு மையம் மூலமாகவோ அல்லது அந்தந்த கிளை மூலமாகவோ வங்கியைத் தொடர்புகொண்டு, திருத்தம் செய்வதற்குத் தேவையான நேரத்தை அனுமதிக்கலாம்.

30. நஷ்ட ஈடு

கணக்கு அல்லது வங்கியின் சேவைகளை தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் இழப்புகளுக்கு வாடிக்கையாளர் எக்விடாஸுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

வாடிக்கையாளரின் கணக்கு அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் சேதங்களுக்கோ அல்லது இந்த விதிமுறைகளில் உள்ள எந்தவொரு கடமைபொறுப்பையும் நிறைவேற்றத் தவறினாலோ அல்லது வாடிக்கையாளரால் ஏற்பட்ட அல்லது வாடிக்கையாளர் அனுபவிக்கும் இழப்பு அல்லது சேதம் ஆகியவற்றிற்கு எக்விடாஸ் பொறுப்பாகாது.

எக்விடாஸ்-இல் தனது கணக்கை நிறுவுவது தொடர்பாக எந்தவொரு தொடர்புடைய அதிகார வரம்பிலும் பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் முழுமையாக இணங்குவதை உறுதி செய்வதற்கு வாடிக்கையாளர் மட்டுமே பொறுப்பாவார் மற்றும் அத்தகைய பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கத் தவறினால் எக்விடாஸுக்கு ஏற்படக்கூடிய அனைத்து செயல்கள், நடவடிக்கைகள், இழப்புகள், சேதங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றுக்காக எக்விடாஸ்-க்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டும்.

கணக்கு மூடப்பட்டாலும் மேற்கூறிய இழப்பீடுகள் தொடரும். ஒரு தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலை நிகழ்வு மூலம் நிபந்தனைகளின் கீழ் அல்லது அதன் சேவைகள் / வசதிகளுக்கு குறிப்பாகப் பொருந்தும்படி வங்கியின் எந்தவொரு கடமைபொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் ஏதேனும் தோல்வி காரணமாக எந்தவொரு பரிவர்த்தனையும் பலனளிக்கவில்லை அல்லது முடிக்கப்படாமல் இருந்தால் செயல்திறன் தடுக்கப்பட்டால், தடைபட்டால் அல்லது தாமதமாகிவிட்டால் அதற்கு வங்கி பொறுப்பேற்காது மேலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலை நிகழ்வு தொடரும் வரை அதன் கடமைபொறுப்புகள் இடைநிறுத்தப்படும்.

31. வில்லங்கம் இல்லை

வங்கியுடன் வெளிப்படையான எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் இல்லாமல் வங்கியில் வைத்திருக்கும் கணக்கில் (கணக்கில் உள்ள கிரெடிட் உட்பட) எந்த வில்லங்கமும் / மூன்றாம் தரப்பு ஆர்வம் உருவாக்கப்படவில்லை என்பதை / அனுமதிக்கப்படவில்லை என்பதை வாடிக்கையாளர் உறுதி செய்ய வேண்டும்.

32. ஆளும் சட்டம் & சட்ட அதிகாரம்

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது வங்கியில் வைத்திருக்கும் கணக்குகளின் செயல்பாடு அல்லது அதன் வாடிக்கையாளர்களுக்கு வங்கி வழங்கும் சேவைகள் இந்திய குடியரசின் சட்டங்களால் மட்டுமே நிர்வகிக்கப்படும். ஏதேனும் சர்ச்சைகள் / உரிமைகோரல்கள் / சிக்கல்கள் ஏற்படுமெனில் சென்னையின் அதிகார வரம்பிற்குட்பட்ட நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களில் கொண்டு வரப்படும். எந்தவொரு வாடிக்கையாளருக்கும் எதிராக எந்தவொரு நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்கள் / அதிகாரங்களில் வழக்குத் தொடர வங்கிக்கு உரிமை உள்ளது. மேலும் வாடிக்கையாளர் அத்தகைய சட்ட அதிகாரத்திற்கு இதன்மூலம் ஒப்புதல் அளிக்கிறார்.

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஏதேனும் விதிகள் சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியாத/அமல்படுத்த முடியாத/தடைசெய்யப்பட்டால், அப்படிச் செயல்படுத்த முடியாத அளவு இந்த விதிமுறைக்கு மட்டுமே பொருந்தும் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் மீதமுள்ள விதிமுறைகளை செயலற்றதாக ஆக்காது.

33. தகவல்களைப் பகிர்தல் / வெளிப்படுத்துதல்

வங்கியில் ஏதேனும் ஒரு கணக்கைத் தொடங்கி பராமரிப்பதன் மூலம் வாடிக்கையாளர், வங்கியில் இருக்கும் வாடிக்கையாளர் கணக்கு / தனிப்பட்ட தகவல்களை, அத்தகைய தகவல்களை அணுகும் உரிமையுடைய பின்வருபவை உள்ளிட்ட ஆனால் அவை மட்டுமல்லாத எந்தவொரு நிறுவனத்துடனும் பகிர்ந்து கொள்ள / வெளிப்படுத்துவதற்கான உரிமையை வங்கிக்கு வழங்குகிறார்:

1. இந்திய ரிசர்வ் வங்கி (RBI)

2. அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி/அமைப்பு மூலமாக இந்திய அரசு

3. நீதிமன்றங்கள் / விசாரணை முகமைகள்

4. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI)

5. பங்குச் சந்தைகளின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள்

6. தணிக்கையாளர்கள், தொழில்முறை ஆலோசகர்கள்

7. வங்கியுடனான 'சேவைகள் / திட்டங்கள்' தொடர்பான சட்ட ஒப்பந்தத்தை கொண்டுள்ள மற்றும் தகவலை அணுக தேவையுள்ள மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்கள்

8. அத்தகைய தகவல்களைப் பெற உரிமையுள்ள வேறு எந்தவொரு சட்ட நிறுவனம் / அங்கீகரிக்கப்பட்ட தனிநபர்

9. கிரெடிட் தகவல் பணியகம்

வாடிக்கையாளர் அல்லது அவரது கணக்குகள்/நிதி நிலைகள் பற்றிய வேறு எந்தத் தகவலுக்கும் வங்கிக்கு கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் மூலம் வங்கியால் பொருத்தமானதாகக் கருதப்படும் எந்தத் தகவலையும் பெறுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க்-ஆனது வாடிக்கையாளர்களின் தொடர்புத் தகவலை சேவை மற்றும் விளம்பர நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகிறது. இந்த காரணத்திற்காக இந்த வாடிக்கையாளரின் தகவலை வங்கியின் குழு நிறுவனம்(கள்) அல்லது நிபந்தனைகளுக்கு கட்டுப்படும் வேறு மூன்றாம் தரப்பினருடன் எக்விடாஸ் பகிர்ந்து கொள்ளலாம் (எக்விடாஸ் வழங்கிய வாடிக்கையாளர் தகவலைப் பயன்படுத்தினால்). எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் கணக்கு தொடங்கும் போது இந்த நோக்கத்திற்காக வாடிக்கையாளரிடமிருந்து வெளிப்படையான ஒப்புதலைப் பெறுகிறது.

ESFB-இல் ஒரு கணக்கைத் தொடங்குவதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான்/நாங்கள் படித்து புரிந்து கொண்டேன்/கொண்டோம். (a) ATM-கள், (b) ∴போன் பேங்கிங், (c) டெபிட் கார்டுகள், (d) மொபைல் பேங்கிங், (e) நெட் பேங்கிங், (f) பில் செலுத்தும் வசதி, (g) உடனடி விழிப்பூட்டல் வசதி, (h) மின்னஞ்சல் அறிக்கை போன்றவை உள்ளிட்ட ஆனால் அவை மட்டும் அல்லாத பல்வேறு சேவைகள் தொடர்பான விளக்கமான விதிமுறைகளும் நிபந்தனைகளும் மேற்கோள் நோக்கத்திற்காக இணையதளத்தில் கிடைக்கும் அல்லது கிளையிலிருந்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நகலை நான்/ நாங்கள் கோரலாம் என்பதை நான்/நாங்கள் புரிந்துகொள்கிறேன்/ புரிந்துகொள்கிறோம். இந்தக் கணக்கு / உறவுமுறைக்கு பொருந்தும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றங்கள் / புதுப்பிப்புகளுக்கான அணுகல் இணையதளத்தில் (www.equitasbank.com) மட்டுமே கிடைக்கும் என்பதை நான்/நாங்கள் புரிந்துகொள்கிறேன்/ புரிந்துகொள்கிறோம்.

TRUE COPY

VIE SUPPORT LANGUAGE SERVICES PVT. LTD. CHENNAI

NOTARY PUBLIC ★ K.S. VIJAYAKUMAR CHENNAI, TAMILNADU REGN. No. 14572 DATE OF EXPIRY 18-09-2029 ★ GOVERNMENT OF INDIA

13/12/2024

K.S. VIJAYAKUMAR M.A., B.L.
ADVOCATE & NOTARY PUBLIC
GOVERNMENT OF INDIA
4/7, IBRAHIM 1st STREET, CHENNAI-1
Cell: 9841373276